

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

ஐப்பசி - கார்த்திகை
நவம்பர் - 2019

மலர் 8 இதழ் 11

பொருளடக்கம்

| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| Importance of Sraddha Ceremony | 4 |
| கீதை பிறந்தது எதற்காக?<br>பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 6 |
| நீதிக் கதைகள்<br>பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 9 |
| அனுக்கிரஹ பாஷணம்<br>பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 12 |
| திருக்குறள் நூற்றெட்டு | 17 |
| தமிழ் பாகவதம் | 19 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 21 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ - 18 | 25 |
| புராணக்கதை | 27 |
| கார்த்திகை மாத விசேஷ தினங்கள் | 29 |
| வேதாந்த ஸாரம் | 30 |
| பித்ரார்ஜிதம் | 32 |
| மகாபாரத சுருக்கம் | 34 |
| ஹிந்து மத - ப்ராமண நூல்கள் | 36 |
| ஜயத தேவர் அருளிச் செய்த பஜகோவிந்தம் | 38 |
| ஈச்வர தியானம் | 40 |
| ஞானத்தை யாரிடம் கற்பது | 42 |
| அருணகிரிநாதரின் திருப்புகழ் | 45 |
| குலசேகர ஆழ்வாரின் அறிவுரை | 46 |

भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.

நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்







ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்

வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

## தேவை ஆத்ம குணங்கள் - 3

கடந்த இதழ்களில் எட்டு ஆத்ம குணங்களில் நான்கினைப் பார்த்தோம். இவ்விதழில் மீதி நான்கினை பார்ப்போம்.

**அனாயாஸம்** : ஆயாஸாமில்லாமல் அதாவது பரபரப்பு இல்லாமல் இருப்பது. உடலுக்கும், பொருளுக்கும், பிறர்க்கும் எந்த ஸ்ரமத்தையும் கொடுக்கக் கூடாது பசி துடிக்கத் துடிக்க தீர்த்தம் கூட அருந்தாமல் உபவாஸம் இருத்தல். தன் சக்திக்கு மீறி கடுமையான வேலையை செய்தல், தன் சக்திக்கு மீறி செலவு செய்தல் போன்ற ஆயாஸமான கார்யங்களை செய்யாமல் இருப்பது அனாயாஸம் எனப்படும். (இப்போது ஐடி துறையில் நடப்பது ஆயாஸமான கார்யங்களே).

**மங்களம்** : அழுக்கில்லாத ஆடம்பரம் இல்லாத அவஸ்யமான ஆடை, ஆபரணங்கள் அணிவது, நெற்றிக்குத் திலகமிட்டு சிரித்த முகமாக இருப்பது, இன்சொல் கூறுவது, முதலியன மங்களம் என்பர். ஐயோ, எழவு போன்ற சொற்களைக் கூறாமல் சிவ சிவ, ராம ராம, க்ருஷ்ண க்ருஷ்ண என்று கூறுதல். யாரும் திலகமிடாமல் இருக்க கூடாது. ஈரத் துணியுடன் வெகு நேரம் இருக்க கூடாது.

**கார்ப்பண்யம் :** லோபித்தனம் இல்லாமலிருத்தல், அதாவது ஈகை செய்தல் அவஸ்யம். தம்மால் ஆன சிறிய உதவியைச் செய்வது சிறந்தது. சக்திக்கு ஏற்றவாறு தானம் செய்வது நம் கடமை. இதைச் செய்யாமல் இருப்பவர்களை ''கயவர்'' என்றே வள்ளுவர் இகழ்வார். ஜன்மாவை பாழாக்காமல் ஜீவனுக்குப் பல வழிகளில் நன்மை தேடுவது.

**அஸ்ப்ருஹா :** பற்று இல்லாமல் இருத்தல். தன் பொருளில், பிறர் பொருளில், உடலில் எந்தப் பற்றும் இல்லாதிருத்தல். கிடைத்ததைக் கொண்டு திருப்தியுடன் இருத்தல். மா க்ருத கஸ்யசித் தனம்'' என்று ஈசோபனிஷத் கூறும். ''வேண்டாமை அன்ன விழுச்செல்வம்'' என்பார் திருவள்ளுவர். இத்தகைய எட்டு தேவ குணங்களையும் தேவ குணங்கள் என்று கூறாமல் ஆத்ம குணங்கள் என்பதால் ஆத்மஸ்வரூபத்தை அடைவதற்கேற்ற குணங்கள் என்று தெரிகிறது.

இதுவரை சொல்லப்பட்ட எட்டு குணங்களில் ஒன்று கூட நம்மால் எட்ட முடியாதவை போல தோன்றும். முயன்றால் முடியாதது இல்லை. கடைசியில் சொல்லப்பட்ட அஸ்ப்ருஹா தான் பல ஹானிகளுக்குக் காரணம் என்பது என் தீர்மானம். இன்றைக்கு நாட்டில் நடக்கும் பல மோசடிகளுக்கும், கொலைகளுக்கும் இதுவே காரணம். பாமரனைவிட படித்தவர்கள் தான் இதில் அதிகம் ஈடுபடுகிறார்கள் என்பது வேதனைக்குரிய விஷயம். இம்மாதிரி நிகழ்ச்சிகள் நடக்காமலிருக்க சிறுவயது முதலே எல்லாரும் இதை உணரச் செய்ய வேண்டும். செய்தால் நல்லது என்று கூறிக்கொண்டு இவ்விதழை ஸ்ரீசரணர்கள் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

# IMPORTANCE OF SRADDHA CEREMONY

*Manusmrti* is the code of law and conduct for the Hindus. The kings and rulers of the past were guided by the rules contained therein for the maintenance of peace and order in the country. Based on the different stages of life of an individual, there were four divisions such as *Brahmacarya, Grhastha*, *Vanaprastha* and *Samnyasa.*

The order of the society gradually perished due to modern civilization and deterioration of spiritual life in man. The problem of life is very serious now. The struggle for existence is very high. Food and other luxuries have taken the place of religion.

The scriptures have stipulated *Panca Maha Yajnas* for the householder, failure of which entails penalty. The *Yajnas* are— *Deva Yajna* (sacrifice of gods), *Yajna* (sacrifice to Seers), *Pitr Yajna* (sacrifice to ancestors), *Bhuta Yajna* (sacrifice to animals) and *Yaa* (sacrifice to guests).

*Sraddha* ceremony comes under *Pitr Yajna.* Every householder must perform *Sraddha* ceremony for his ancestors. *Pitrs* are ancestors who dwell in *Pitrloka.* They possess the power of clairvoyance and clairaudience. When *Mantras* are recited they exert tremendous influence through their vibrations. The *Pitrs* hear the sound of *Mantras* through their clairaudience and are pleased. They bless who offer oblations. In *Sraddha* the essence of food offerings is taken up by the Sun's rays to *Suryaloka* and then departed souls are pleased with the offerings. Even in Germany and other foreign countries many persons perform *Tarpana* and *Sraddha.* They have scientifically investigated the beneficial effects of such oblations. The *Gita* and *Upanisads* bear testimony to the fact that performance of *Sraddha* is very important. Deluded souls, misguided by false reasoning and logic, do not perform the ceremonies. Satanic influences affect them very easily. Ignorance is the root cause for this state of affairs.

*Sraddha,* ceremony is performed once a year. A day of *Pitrs* is equal to one year of human computation. If we perform *Sraddha* ceremony every year, it is equivalent to daily performance for the *Pitrs.* In their calculation, their sons live for a few days only because 100 years of human life is equal to 100 days for them.

Some people have a doubt as to why *Sraddha* ceremony is required for a person, when *Jiva* transmigrates to another body. It is clearly said, in the *Gita* that virtuous persons who perform sacrifices attain heaven and on exhaustion of their *Punya*

(merit), they enter the world of mortals. Their enjoyments in the heaven are enhanced and sufferings in the hell are mitigated by the performance of *Sraddha* by their sons. According to the theory of transmigration even if the soul takes rebirth immediately after his death, the performance of *Sraddha* adds to his happiness in the new birth.

*Sraddha* ceremony for his parents and forefathers should be performed with great faith. In the olden days the question as to whether to perform *Sraddha* ceremony or not, did not arise at all. Then people had full faith and reverence for the scriptures. (TV. 39) the man of faith attains knowledge and there by immortality and eternal peace" is the declaration of the *Gita.*

Some people opine that once they perform a *Sraddha* at Gaya and other places of religious importance, they need not repeatedly perform the ceremony every year. This is not a general rule. It applies to very special cases only. Taking shelter under this exception, if people discontinue performing annual *Sraddha* ceremony, they are doing so, out of sheer ignorance. They fail in their duties to the *Pitrs.*

The various religious observations stipulated in the Scriptures are meant for purifying the mind of the ignorant man. The goal of *Karma Yoga* is purification of the mind. *Sraddha* ceremony is one such obligatory duty which purifies the mind. Besides this, their forefathers are also pleased and their blessings tend to enhance the material and spiritual growth of those who perform the *Sraddha* ceremony.

People who do not have sons suffer in the otherworlds. But if they lead a virtuous life of discrimination, dispassion, belief in the *Sastras,* and *Vedas* and do *Japa,* meditation and study, they will not suffer, even if they do not have sons. They will enjoy perfect peace without being affected by the dark forces of ignorance. They are free from base attractions of the world. They have got self surrender and mental purity. All religious observances are for *Citta Suddhi* (purification of the mind).

Spending money enormously on *Sraddha* ceremony is a mere wastage. It is a delusion to think that *Pitrs* will get more peace by spending more money. It is not money but the intensity of the *Bhava* that counts. On such occasions the poor and deserving persons are to be fed sumptuously. Study of scriptures should be done on such occasions. The performer of *Sraddha* ceremony should observe strict spiritual discipline like *Japa,* meditation, *Mauna* etc. He should maintain strict *Brahmacarya* and should not spend time in idle pursuits. The story of Naciketa of the *Upanisads* should be studied. Thus the performer of *Sraddha* attains immortality.

# கீதை பிறந்தது எதற்காக?

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



அனுபவ ப்ரும்மஞானிக்குள்ள ஆனந்தத்தில் வேதங்களால் விதிக்கப்பட்ட சகல கர்மாக்களும் அடங்கியிருக்கின்றன. இக்கர்மயோகம் எதுவரையில் செய்யப்பட வேண்டுமென்பதற்கு சமாதானமாக இரண்டாமத்தியாயம் 52, 53வது ச்லோகங்களைச் சொல்லுகிறார்.

यदा ते मोहकलिलं बुद्धिर्व्यतितरिष्यति ।
तदागन्ताऽसि निर्वेदंश्रोतव्यस्य श्रुतस्य च ॥
(2. 52)

श्रुतिविप्रतिपन्ना ते यदा स्थास्यति निश्चला ।
समाधावचलाबुद्धिः तदायोगमवाप्स्यसि ॥
(2. 53)

இரண்டாமத்தியாயம் 39வது ச்லோகத்தில் एषातेऽभिहिता सांख्ये बुद्धिर्योगेत्विमांश्रुणु (२.३९) என்னுமிடத்தில் யோக என்கிற பதத்தை பகவான் முதன் முதல் உபயோகிக்கிறார். இரண்டாவது அத்தியாயம் 48வது ச்லோகத்தில்

योगस्थ:कुरु कर्माणि ॥ (2.48) என்கிறார், 50 வது ச்லோகத்தில்

तस्माद्योगाययुज्यस्व ॥ என்கிறார்.

53 வது ச்லோகத்தில்

तदा योगमवाप्स्यसि । என்கிறார்.

மேலும் கீதையில் அநேக இடங்களில் யோகம், யோகீ, யுக்த, எனும் பதங்களை பகவான் கையாளுகிறார். ஆனால் சில இடங்களில் இந்த யோக என்னும் சொல் கர்ம யோகத்தையும், சில இடங்களில் பக்தியோகத்தையும், சில இடங்களில் த்யான யோகத்தையும், சில இடங்களில் ப்ராணாயாமமென்னும் யோகத்தையும், சில

இடங்களில் அனுபவ ஞானத்தையும் குறிக்கிறது. கர்மயோகத்தைக் குறிக்கும் போது என்னும் योग சொல்லுக்கு பகவான் தானே இரண்டிடங்களில் பொருள் கூறியிருக்கிறார்.

1. समत्वं योग उच्यते । (2. 48)

2. योग: कर्मसु कौशलम् ।। (2. 50)

கௌசலமென்றால் சாமர்த்தியம் என்பது பொருள். கசக்கும் இலுப்பைப் புண்ணாக்கை பக்குவப்படுத்தி ஒரு சமையல்காரர் ருசிகரமாகச் செய்து விட்டால் அவரைச் சாமர்த்தியசாலி என்கிறோம்.

அவ்விதமே பாப புண்ணியங்களையும் பிறவியையும் தரும் ஸ்வபாவத்தையுடைய கர்மங்களை பிறவியை நிறுத்தும் ஞானத்தைக் கொடுக்கும்படி ஒருவன் பக்குவம் பண்ணி விட்டானானால் அவனே குசலன், அவனே சாமார்த்தியமுள்ளவன் என்பது.

योग: कर्मसु कौशलम् (2. 49) எனும் வாக்கியத்தின் பொருள்.

கர்மமென்னும் கசப்புப் பொருளில் ஸமத்வமென்னும் மாற்றைச் சேர்த்து விட்டால் அது சித்த சுத்தியெனும் விருந்திற்கு உதவுகிறது. யோகமென்னும் சொல் ஞானத்தைக் குறிக்கும் போது அச்சொல்லுக்குப் பொருள் கூறுமிடத்து

तं विद्याद् दु:ख संयोगवियोगं योगसंज्ञितम् ।

स निश्चयेन योक्तव्यो योगोऽनिर्विण्ण चेतसा ।। (6. 23)

துக்கத்தின் வியோகமே யோகம் என்ற கருத்தை பகவான் வெளியிடுகிறார். யோகமென்னும் பதத்திற்கு சேர்க்கை என்று பொருள். வியோகமென்றால் பிரிவு. யோகமென்னும் பதத்திற்கு வியோகமென்று பொருள் கூறுகிறார் பகவான். இதுவும் விபரீதமாக இருக்கிறது. இங்கு யோகமென்னும் பதத்தால் பகவான் சில இடங்களில் ஞான நிலையைக் குறிக்கிறார். இதையே ப்ராம்மீஸ்திதியென்று இரண்டாவது அத்யாயத்தின் கடைசி ச்லோகத்தில் பகவான் உரைக்கிறார். இப்பூர்ண ப்ரும்ம நிலையே, இரண்டாவதற்ற ஆனந்தநிலையே, ஆத்மாவின் உண்மை நிலையாயிருக்கிறது. இதில் மற்றொன்றின் சேர்க்கைக்கே, இடமில்லையே, சேர்க்கை எனும் பொருள் கொண்ட யோகமென்னும் பதத்தால் இதை எப்படிச் சொல்லுவது என்ற சந்தேகத்தை நிவர்த்திப்பதற்காகவே ஞானத்தைக் குறிக்கும் யோகமென்னும் சொல்லிற்கு சேர்க்கையென்ற பொருளில்லை. பிரித்தலென்றே பொருள், எதைப் பிரித்தல்?

ஆத்மாவில் தோன்றும் துக்கம் முதலிய இரண்டாவது பொருளைப் பிரித்தலே. இதுதான் ஞானயோகம், மற்றொன்றின் சேர்க்கையல்ல. அதனாலேயே யோக ஸம்க்ஞி தம் என்று வியோகத்திற்கே யோகம் என்று பெயர் வைத்திருக்கிறோம் என்று பகவான் தெளிவுபடுத்துகிறார். சமாதியில் காற்றில்லாவிடத்து ஒரே நிலையில் நிற்கும் தீப ஜ்வாலை போல் புத்தி அசையாமல் நிற்கும் நிலை வந்து விட்டால் கேட்க வேண்டியதும், கேட்டதும் அடங்கிப் போய் விடுகின்றன என்று சொல்லி கர்மயோக உபதேசத்தை முடிக்கிறார் பகவான்.

तदा गन्तासि निर्वेदं श्रोतव्यस्य श्रुतस्य च ।। (2.52)

இதைக் கேட்ட அர்ஜுனன் ஸமாதி நிலையில் புத்தி நிலைத்தவனுக்கு வெளியிலக் கணங்கள் என்னென்னவென்று வினவுகிறான். துக்கத்தில் மூழ்கி உடம்பு பதறிக் கொண்டிருந்த அர்ஜுனன் கர்மயோகத்தினுடைய முடிவான சமாதி நிலையைப் பற்றிக் கேட்க ஆரம்பிக்கிறதைக் கண்டு பகவானுக்கு ஏற்பட்டிருக்கும் சந்தோஷத்தை நாம் சொல்லவும் வேண்டுமா? 55 வது ச்லோகம் முதல் 59வது ச்லோகம் வரையில் प्रजहाति यदा कामान् (2.55) என்று ஆரம்பித்து ஸமாதியிலுள்ளவன் லக்ஷணத்தை परं दृष्ट्वा निवर्तते (2.59) என்ற பூர்ணாத்மதர்சனத்தோடு முடிக்கிறார். 60 வது ச்லோகம் முதல் எட்டு ச்லோகங்களால் புலன்களையடக்க வேண்டிய முறைகளைக் கூறி (2.68) என்று பூர்த்தி செய்கிறார் இடையில் 69 வது ச்லோகமாகிற या निशा सर्वभूतानाम् (2. 69) எனும் ச்லோகத்தில் பூர்ணாத்மதர்சனம் ஏற்பட்டவன் உலகத்தைப் பார்ப்பதும் அஞ்ஞானிகளாகிய நாம் உலகத்தைப் பார்ப்பதும் ஒன்றுக்கொன்று தலைகீழாக இருக்கும் என்பதை பகவான் விளக்குகிறார். ரயிலில் போகிறவனுக்கு மரங்களும், கோபுரங்களும் எதிர் நடையாகப் போகுமல்லவா?

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

***“வினையின் பயனே சுகமும் துக்கமும் தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினையறுப்பான்”***

ராமன் அயோத்தியில் மகுடம் பூண்டு அரசரானார். வானவரும், முனிவரும், மக்களும் ராமனை வாழ்த்தினர். ஒரு முனிவர் ராமனும் லக்ஷ்மணனும் சீதையும் காட்டில்பட்ட துன்பங்களைப் பற்றிக் குறிப்பிட்டு யாரோ செய்த வினைகளைத் தீர்க்க ராமனும், சீதையும் துன்பமனுபவித்தனர் என்றார். மற்றொரு முனிவர் ராமனை விட லட்சுமணனுக்கும், லட்சுமணனைவிட சீதைக்கும் துன்பம் அதிகம் என்றார்.

ராமன் கூறினார் : இன்பமோ, துன்பமோ தானே விளைவதில்லை. முன் செய்த வினையே இன்பத்தையும், துன்பத்தையும் தருகிறது. செயல் புரியும் போது அது இன்பம் தரப் போகிறதென்றோ துன்பம் தரப்போகிறதென்றோ நாம் உணர்வதில்லை. ஆனால் அவ்வினை பழுத்து எதிர்பாராத நேரத்தில் பலனைத்



தரும் போது அந்த எதிர்பாராத நிகழ்ச்சி முன் செய்த வினையைச் சுட்டிக் காட்டும், அதனால் தான் பெரியோர்கள் நற்செயல் இது, கெட்ட செயல் இது என்று பாகுபடுத்தி வழிகாட்டியுள்ளார்கள். எங்கள் மூவரின் வாழ்க்கையிலும், வினை தந்த பயனாக நாங்கள் சில நிகழ்ச்சிகளைச் சந்திக்க நேரிட்டுள்ளது. காரணமின்றி காரியமில்லை.

விச்வாமித்திரருடன் நானும், லட்சுமணனும் அவரது வேள்வி காக்கச்

சென்றோம். நடுவில் தாடகை குறுக்கிட்டாள். முனிவரது ஆணைப்படி அவளைக் கொன்றேன். கொல்வதற்கு முன் பெண்ணைத் துன்புறுத்துவதோ, கொல்வதோ பாவச் செயல் என்ற நிலையை முனிவரிடம் விளக்கினேன். முனிவரோ சமுதாயத்திற்கும், சூழ்நிலைக்கும் தீங்கு விளைவிக்கின்ற அரக்கியிடம் பெண் என்று இரக்கம் காட்டுவது தவறு எனச் சொன்னார். தாடகையைக் கொன்றது சமுதாயத்திற்கு நன்மை செய்த பெரும் புண்ணிய செயலாயினும், பெண்கைக் கொல்வதாகிய தீச் செயலின் தன்மையைக் குறைக்கவில்லை. பெருந் தீச் செயலாகித் துன்பம் தந்தது. என் அன்னை கௌசல்யை விட என்னிடம் என்றும் பன்மடங்கு அன்பு காட்டிய கைகேயி அன்னையை என்னை காட்டிற்கு அனுப்பச் செய்ய அது தூண்டியது. கைகேயி அன்னையிடம் அந்த குரூர எண்ணம் அதற்கு முன்னரும் இருந்ததில்லை. அந்த ஓரிரு நாட்களுக்குப் பிறகும் இருந்ததில்லை. காட்டிலிருந்து என்னைத் திருப்பி அழைத்து வர வந்த பரதனுக்கு முன்னதாகத் தேரில் ஏறிக் காட்டிற்கு வந்தவள் கைகேயியே. முன் செய்த வினையைத் தவிர வேறு எதனையும் இதற்குக் காரணமாகக் கூற முடியாது என்றார்.

லட்சுமணன் சொன்னார் - என் அண்ணா கூறியது முற்றிலும் சரியே. தாடகையைக் கொல்லும்படி விச்வாமித்ரர் கூறியதும் ராமனது தயக்கம் நீங்கவில்லை. அவள் மோத வருகையில் கைகளை மட்டும் வெட்டினார். நானோ அவளே வெட்கி ஓடும்படி செய்தால் நல்லதே என நினைத்து அவள் காதுகளையும், மூக்கையும் அறுத்தேன். அவளது அழகைச் சிதைத்து அவளை அவமதிக்கின்ற செயல் என் மனத்தில் ஒரு கெட்ட மனப்பாங்கை உருவாக்கியது போலும், சூர்ப்பணகை என்னிடம் காம நோக்குடன் ஏதேதோ புலம்பினாள். முன் மனத்தில் கள்ளமாகப் புகுந்த அந்த கெட்ட எண்ணம் மறுபடி தலை எடுத்தது. அவள் காதுகளையும், மூக்கையும் அறுத்தெறிந்தேன். சூர்ப்பணகையை நான் கொன்றிருக்கலாம். அது பெரும்பாவமானது. பெண்ணைக் கொல்வதைவிடப் பெண்மையை அவமதிப்பது பெரும்பாவம் என்பதைப் பின்னர் உணர நேர்ந்தது.

அயோத்தியிலும் காட்டில் பதிமூன்று ஆண்டுகளும், என் தாயின் ஸ்தானத்தில் போற்றி நான் வணங்கி வந்த சீதா தேவி மாரீசனின் கதறலைக் கேட்டபின் கலங்கிய நிலையில் நான் ராமனைக் காணச் செல்லாதிருந்ததைத் தவறாகப் புரிந்து கொண்டு கெட்ட எண்ணம் கொண்டே நான் அங்கிருப்பதாக எண்ணி ஏதேதோ சொல்லத் தகாததை எல்லாம் சொன்னாள்.

நான் அதைக் கேட்பதற்கே கூசிக் கடமையை மறந்து அங்கிருந்து அகன்றேன். அந்த நிலை பெண்மைக்கு நான் இழைத்த தீமையின் பின் விளைவே என்று உணர்ந்ததால் ஆழ்ந்த வடுவான அது மாறவில்லை. சீதா தேவி அதற்கு முன்னும், அதற்குப் பின்னும் அவ்வாறு ஆவேசப்பட்டதில்லை. வினையின் பயனல்லாது அந்த மாற்றத்திற்கு வேறு காரணமில்லை என்றார்.

சீதை சொன்னாள் - “லட்சுமணன் கூறியது முற்றிலும் சரியே. அன்று வரை எனது புத்திரனின் ஸ்தானத்தில் லட்சுமணனிடம் நான் அன்பு காட்டி வந்தேன். ஏதோ ஒரு கள்ள எண்ணம் இதுவரை மறைந்திருந்தது அன்று வெளிப்பட்டதே போன்று தன் நிலைக்கு முற்றிலும் மாறுபட்ட ஆவேசம் கொண்டு லட்சுமணனைத் தகாதவாறு ஏசியது என் வாழ்வில் நான் செய்த கொடுஞ்செயல். இவர்கள் இவருவருக்கும் வினை பயன்தரக் காத்திருந்தது. என் வினை நொடி நேரம்கூடக் காத்திருக்கவில்லை. சில நொடிகளில் நான் செய்தவினை என் வாழ்நாள் முழுவதும் தாக்க வல்ல பின்விளைவை ஏற்படுத்தியுள்ளது. நாங்கள் மூவரும் வினையின் பயனாகக் கடலலையில் சிக்கிய இலைபோல் அலைக்கழிக்கப்பட்டோம். நற்குலப் பிறப்பும் குருகுலத்திலும், குடும்பத்திலும் பெற்ற கல்வியும், பண்பாடும் கூட தீச்செயல்களிலிருந்து எங்களைத் தடுக்கவில்லை எனும் போது விதி வலிதெனத் தோன்றுகிறது. எனினும் நற்குலப் பிறப்பு முதலியவைதான் எங்களை பல தீச்செயல் புரியாதபடி கூசச் செய்து தடுத்தது என்பதையும் புரிந்து கொண்டோம்” என்றாள்.

முனிவர்கள் வினைப்பயனின் தாக்கத்தைப் பற்றி முழு விளக்கம் பெற்றுச் சென்றார்கள்.

# அனுக்ரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



**ஸ்ரீமடம் முகாம் ஆழ்வார்பேட்டை வீனஸ் காலனி, ஆஸ்திக சமாஜத்தில் தொடர்ந்து நடைபெற்றது.**

செப்டம்பர் மாதம் 7, 8 மற்றும் 9 தேதிகளில் அக்னிஹோத்ரிகளின் ஸதஸ் மிகவும் விமரிசையாக நடைபெற்றது. இந்தியாவின் பல பிரதேசங்களிலிருந்து 140 அக்னிஹோத்ரிகள் இந்த சதஸில் பங்கேற்றார்கள். அக்னிஹோத்ரிகளின் சௌகரியத்திற்காக இவர்கள் நாராயணி அம்மாள் கல்யாண மண்டபத்திலும், தினம் இஷ்டி செய்பவர்கள்/ஸ்வயம்பாகிகள் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமத்திலும் தங்க வைக்கப்பட்டு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டது. தினமும் காலையிலும் மதியமும் இவர்களின் ஸதஸ் ஸ்ரீ ஆஸ்திக சமாஜத்தில் நடைபெற்றது. ஸதஸுக்கு ஸ்ரீ சுந்தர்ராம வாஜபேயீ அவர்கள் தலைமை தாங்கி நடத்தி வைத்தார்கள். நெரூர் ஸ்ரீ ரமண சர்மா சதஸின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தார். பெங்களூர் ஸ்ரீ பாலகிருஷ்ணன் அக்னிஹோத்ரிகளை நன்றாக கவனித்து, அவர்களுக்கு மரியாதை செய்வது, சம்பாவனை போன்ற விஷயங்களை கண்காணித்து சிறப்பாக பணியாற்றினார்.

ஸதஸின் 2வது நாளான 08.09.19 அன்று அக்னிஹோத்ரிகள் ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளுக்கு பிக்ஷாவந்தனம் செய்தார்கள். பூர்த்தியன்று அக்னிஹோத்ரிகள் யாவருக்கும் தகுந்தபடி மரியாதை செய்து சம்பாவனையும் அளிக்கப்பட்டது.

ஆகஸ்ட் மாதம் 31ம் தேதி மாலை 5 மணி அளவில் 2 மணி நேரத்திற்கு மேலாக ஒரு PROFESSIONAL ENCLAVE நடைபெற்றது. சுமார் 200க்கு மேலான ஆடிட்டர்கள் (CA), டாக்டர்கள், வழக்கறிஞர்கள் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சிக்கு ஆடிட்டர் ஸ்ரீ குருமூர்த்தி வந்திருந்து ஸ்ரீமடத்திற்கு PROFESSIONALS எந்தவிதம் கைங்கர்யம் செய்யமுடியும் என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்தார்கள். 10க்கும் மேற்பட்ட முக்கிய

விருந்தினர்கள் அவர்கள் கருத்தை எடுத்துரைத்தார்கள். முத்தாய்ப்பாக ஸ்ரீ பெரியவாள் அவர்களின் அனுக்ரஹ பாஷணம் அமைந்தது.

இதுதவிர கீழ்க்கண்ட ஆன்மிக கலை நிகழச்சிகள் நடைபெற்றது.

சாதுர்மாஸ்ய காலத்தில் ப்ரதி செவ்வாய்கிழமை காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை புதுதில்லி ஸ்ரீ நாராயணஸ்வாமி (IAS RETD) குழுவினரின் திருப்புகழ் பூரண பாராயணம் நடைபெற்றது.

| | |
|---|---|
| 26.08.19 - ஸ்ரீ S. நடராஜன் | நாம சங்கீர்த்தனம் |
| 27.08.19 - நிகிலா ஷ்யாம்சுந்தர் | நாம சங்கீர்த்தனம் |
| 29.08.19 - ஸ்ரீமதி கீர்த்திவாஸன் | தேவாரம் / திருவாசகம் |
| 30.08.19 - ஹேமா குழுவினர் | தேவி மஹாத்மியம் பாராயணம் |
| 31.08.19 - ஸ்கந்தப்ரியா குழுவினர் | மூகபஞ்சசதி பாராயணம் |
| 01.09.19 - புலியூர் ஸ்ரீ G.காசிநாதன் | நாம சங்கீர்த்தனம் |
| 05.09.19 - விசலூர் ராதாகிருஷ்ணன் | நாம சங்கீர்த்தனம் |
| 07.09.19 - ப்ரியா ஸ்ரீராம் குழுவினர் | விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணம் |

மேலும் 02.09.19 முதல் 13.09.19 - 12 நாட்கள் - ஸ்ரீ சுந்தர்குமார் அவர்கள் ‘‘ஸ்ரீ கிருஷ்ண சரித்ரம்’’ ப்ரவசனம் செய்தார்கள். பக்தர்களிடையே இந்த உபன்யாசம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

14.09.19 பௌர்ணமி - விச்வரூப யாத்ரை- ஸ்ரீ சந்த்ரமௌலீஸ்வர த்ரிகால பூஜையை முடித்துக் கொண்டு அன்று கேம்ப் மேற்கு மாம்பலம் அயோத்யா மண்டபத்திற்கு மாறியது. அன்று மாலை சுமார் 4 மணி அளவில் கூடியிருந்த திரளான பக்தர்களுக்கு அனுக்ரஹ பாஷணம் செய்து அருளினார்கள். ஆஸ்திக சமாஜத்தின் நிர்வாகிகளும் வாலன்டியர்களும் தகுந்தபடி கௌரவிக்கப்பட்டார்கள். ஆஸ்திக சமாஜத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு ஸ்ரீ பெரியவாள் அபிராமபுரம் ஸ்ரீ சங்கர குருகுலம் சென்று அங்கு பகவத்கீதையின் 11வது அத்யாயம் பாராயணம் செய்தார்கள். குருகுலத்திலிருந்து புறப்பட்டு மேற்குமாம்பலம் வந்தடைந்தார்கள். ஜூப்ளி ரோடு - தம்பையா ரோடு சந்திப்பிலிருந்து மிகவும் நேர்த்தியாக தயார் செய்யப்பட்டு அலங்கரிக்கப்படிருந்த குதிரைகள் பூட்டிய ரதத்தில் பட்டிணப்பிரவேசமாக வரவேற்கப்பட்டார்கள். இரவு நேரமான போதிலும் பக்தர்கள் திரளாக

குழுமியிருந்தார்கள். அயோத்யா மண்டபம் வந்தடைந்ததும் நடந்த நிகழ்ச்சியில் ஸ்வாகதபத்ரம் வாசித்து அளிக்கப்பட்டது. ஸ்ரீ பெரியவாள் அனுக்ரஹ பாஷணம் அருளினார்கள்.

15.09.19 முதல் அயோத்யா மண்டபத்தில் (ஸ்ரீராம் சமாஜ்) ஸ்ரீ சந்த்ரமௌலீச்வரர் பூஜை.

15.09.19 மாலை 6.00 மணி அளவில் திருவையாறு ஸ்ரீ கூ.கு.பாலகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களின் நூற்றாண்டு விழா நடைபெற்றது.

16.09.19 முதல் 22.09.19 வரை வேத சப்தாஹம் (ருக், க்ருஷ்ணயஜுர்) நடைபெற்றது. இதில் சுமார் 150 பாடசாலை வித்யார்த்திகளும் பண்டிதர்களும் கலந்து கொண்டனர். காலையிலும், மதியமும் வேதபாராயணம். பாராயணம் முடிந்தபின் இரண்டு வேளையிலும் உபன்யாசம். முல்லைவாசல் மஹாமஹோபாத்யாயா ஸ்ரீ கீ.கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் முன்னின்று 7 நாட்களிலும் நடத்தினார்கள். பூர்த்தியன்று வித்யார்த்திகளும் பண்டிதர்களும் கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்த வருஷத்திய யதி மஹாளயம் மேற்கு மாம்பலம் ஸ்ரீராம் ஸமாஜத்தில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. 108 தண்டி சன்யாஸிகள் மற்றும் அவர்களுடைய உதவியாளர்கள் உட்பட 120 பேர் வாரணாசியிலிருந்து ரயிலில் 22.09.19 அன்று புறப்பட்டு 24.09.19 மதியம் சுமார் 1 மணி அளவில் எழும்பூர் ரயில்நிலையம் வந்து சேர்ந்தனர். அவர்கள் ரயில் நிலையத்தில் மிகுந்த மரியாதையுடன் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டு 3 சிறப்பு பஸ்களில் அவர்கள் தங்குமிடமான மேற்கு மாம்பலம் ராமகிருஷ்ணா கல்யாண மண்டபம் / கௌரி கல்யாண மண்டபங்களுக்கு அழைத்து வரப்பட்டார்கள். அங்கு ஸ்நானம், அனுஷ்டானம், பிக்ஷை முடித்துக் கொண்டு சுமார் 6.00 மணிக்கு ஸ்ரீ அயோத்யா மண்டபத்திற்கு வந்தார்கள். அங்கு அவர்கள் ஆசனங்களில் அமரவைக்கப்பட்டு ஸ்ரீமடத்தின் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. உடையாளூர் ஸ்ரீ கல்யாணராம பாகவதர் குழுவினரால் சிறப்பு நாமசங்கீர்த்தனமும் நடைபெற்றது.

25.09.19 அன்று யதி மஹாளயம். மேற்கு மாம்பலம் சங்கரமடத்திலிருந்து 108 சந்நியாஸிகளும் கோ, மங்களவாத்யம், கௌரிகாளை, நாம சங்கீர்த்தனம், வேத கோஷம், விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணத்துடன் ஏராளமான பக்தர்கள் புடைசூழ அயோத்யா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டார்கள். ஸ்ரீ பெரியவாள் சந்நிதியில்

108 சன்னியாஸிகளுக்கும் காஷாய வஸ்திரம் வழங்கப்பட்டது. பின்னர் அவர்கள் ராமகிருஷ்ணா கல்யாண மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டு யதி மஹாளய பூஜைகள் செய்யப்பட்டன. பிக்ஷை முடித்துக் கொண்டு தீர்த்த நாராயண பூஜை அயோத்யா மண்டபத்தில் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் தரிசித்தார்கள். மாலை 5.00 மணி அளவில் 108 தண்டி சன்யாஸிகளும் 3 சிறப்பு பஸ்களில் காஞ்சிபுரம் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தரிசனம் மற்றும் ஸ்ரீமடத்தில் ஸ்ரீ மஹாபெரியவாள் மற்றும் ஸ்ரீ பெரியவாள் அதிஷ்டானங்களை தரிசனம் செய்தார்கள். அவர்களுக்கு ஸ்ரீமடத்தில் பால் பழம் வழங்கப்பட்டு இரவு மேற்கு மாம்பலம் வந்தடைந்தார்கள்.

26.09.19 அன்று சீக்கிரமே ஆகாரத்தை முடித்துக் கொண்டு அவர்கள் யாவரும் சென்னை எழும்பூர் ரயில் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு பத்திரமாக காசி மற்றும் ஹரித்வார் திருப்பி அனுப்பப் பட்டனர்.

இந்த விழா பொதுமக்களை வெகுவாக பக்திப் பரவசத்திற்கு உள்ளாக்கியது. விழா ஏற்பாடுகளை ஸ்ரீராம் சமாஜத்தின் நிர்வாகிகள் மிகவும் உற்சாகத்துடன் செய்தார்கள். சாஸ்திரா பல்கலைகழகத்தின் வேந்தர் ஸ்ரீ சேதுராமன் மற்றும் துணைவேந்தர் ஸ்ரீ வைத்யநாதன் இருவரும் பக்தி சிரத்தையுடன் பங்கேற்றுக் கொண்டு கைங்கர்யம் செய்தார்கள்.

28.09.19 அன்று மஹாளய அமாவாசை 3 கால பூஜை முடித்துக் கொண்டு அன்று கேம்ப் கிழக்குத் தாம்பரம் ஸ்ரீ சங்கரவித்யாலயா பள்ளி வளாகத்திற்கு வந்த சேர்ந்தது. முன்பாக மிதிலா கல்யாண மண்டபத்தில் 100க்கு மேற்பட்ட மேற்குமாம்பலம் வைதீகர்கள் கலந்து கொண்ட வேத சதஸ் ஒன்று நடைபெற்றது.

## சாரதா நவராத்ரி

29.09.2019 முதல் 8.10.2019 வரை ஸ்ரீ மடம் முகாம் சென்னை கிழக்குத் தாம்பரம் ஸ்ரீ சங்கர வித்யாலயா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. தினமும் நவராத்ரி ஹோமங்கள், சுவாசினி பூஜை, கன்யா பூஜை, உபன்யாசங்கள், சங்கீத கச்சேரி ஆகியவை சிறப்பாக நடைபெற்றது. இது தவிர 8.10.19 விஜயதசமியன்று வழக்கம்போல் வேத ரக்ஷண நிதி டிரஸ்ட் மூலம் வேத பரீக்ஷை பூர்த்தி செய்த வித்யார்த்திகளுக்கு சர்டிபிகேட் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. வழக்கமாக நாடெங்கிலும் உள்ள பாடசாலைகளில் பயிலும் வித்யார்த்திகளுக்கு

ஸ்ரீ மஹாஸ்வாமிகள் ஆக்ஞைப்படி துவக்கப்பட்ட இந்த ட்ரஸ்ட் மூலம் வருடந்தோறும் இரண்டு முறை பரீக்ஷை நடத்தப்படுகிறது. ஸ்ரீ சங்கர ஜயந்தி சமயத்திலும் நவராத்ரி சமயத்திலும் நடைபெறும் பரீக்ஷையில் தேர்ச்சி பெற்ற வித்யார்த்திகளுக்கு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் முன்னிலையில் அவர்களது திருக்கரங்களால் சர்டிபிகேட் வழங்கப் படுகிறது. அந்த நிகழச்சி தற்போது தாம்பரம் முகாமில் நடைபெற்றது. மேற்படி நிகழ்ச்சியில் ஸ்ரீமடம் முகாம் தாம்பரத்தில் தொடர்ந்து 12.10.2019 வரை நடைபெற்றது.

பின்னர் அங்கிருந்து கிளம்பி அச்சரப்பாக்கம் அருகே உள்ள கடமலைபுதூர் கிராமத்தில் உள்ள ஸ்ரீ பாலவேத பாடசாலையில் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் தங்கியிருந்து சந்த்ரமௌலீச்வர் ஸ்வாமி பூஜை நடத்தினார்கள். 13.10.2019 முதல் 23.10.2019 வரை முகாம் அங்கு நடைபெற்றது. அங்கு இருந்த பொழுது அருகே உள்ள பல கிராமக் கோயில்களுக்கு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் விஜயம் செய்தார்கள். அச்சரப்பாக்கம் அருள்மிகு ஆட்சிபுரீஸ்வரர் கோயில், தான்தோன்றீச்வரர் கோயில் பெரும்பேர் கண்டிகை மலைக்கோயிலான ஸ்ரீ சிவசுப்ரமண்யர் ஆலயம் ஆகியவற்றிற்கு ஸ்ரீ ஸ்வாமிகள் விஜயம் செய்து ஸ்வாமி தர்சனம் செய்தார்கள். அங்கு கூடியிருந்த பக்தர்கள் மத்தியில் அனுக்ரஹ பாஷணம் வழங்கிய ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் கிராமக் கோயில்களை பராமரிப்பதன் அவசியம் குறித்து எடுத்துரைத்தார்கள். மேலும் பாலவேதபாடசாலை முகாமில் சுற்றியுள்ள 50க்கும் மேற்பட்ட கிராமக்கோயில்களின் அர்ச்சகர்களை வரவைழத்து ஆலோசனை நடத்தினார்கள். மேலும் அந்த பகுதியில் உள்ள நாதஸ்வரம் மற்றும் தவில் இசைக் கலைஞர்களை வரவழைத்து அவர்களின் இசை தொடர்ந்து அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் செல்லவேண்டிய அவசியத்தை எடுத்துரைத்து அவர்களுக்கு ஸ்ரீமடம் சார்பில் மரியாதை செய்து ஆசி வழங்கினார்கள்.

23.10.2019 அன்று மாலை பாலவேத பாடசாலையிலிருந்து கிளம்பி திருவானைக்காவல் சங்கரமடத்திற்கு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ சந்த்ரமௌலீச்வர ஸ்வாமி பூஜையுடன் வந்து சேர்ந்தார்கள். தொடர்ந்து திருவானைக்காவல் சங்கரமடத்தில் 29.10.2019 வரை பூஜை நடைபெறும்.

தொடரும்.



# திருக்குறள் நூற்றெட்டு

ப்ரதீபப் பேழை

திருக்குறளிலிருந்து தொகுக்கப்பட்டது.
ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான
ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்
அனுக்ரஹித்த திவ்ய ஸ்ரீமுகத்துடன் கூடியது.

**98. பிணியின்மை செல்வம் விளைவின்ப மேமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து**

*பிணியின்மை = நோயின்மை, செல்வம், விளைவு = நல்ல விளைச்சல், இன்பம் = சௌக்கியம், ஏமம் = காவல் இவ்வைந்தும், நாட்டிற்கு, அணி = அலங்காரம், என்ப = என்று கூறுவர் (புலவர்).*

*ஆதலின் இவை ஐந்தும் நாட்டில் நிலைத்திருக்குமாறு அரசன் முயல வேண்டும்.*

**99. ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துத் தானடங் காப்
பேதையிற் பேதையா ரில்**

ஓதி (உம்) = மனமொழி மெய்கள் அடங்குவதற்கு எதுவாய நூல்களை கற்றும், உணர்ந்தும் = மனனம் செய்தும், பிறர்க்கு உரைத்தும் = உபதேசித்தும், தான், அடங்கா = அதன்படி நடவாத, பேதையின் = அவிவேகியைக் காட்டிலும், பேதையர் - சிறந்த அவிவேகியர், இல் = இல்லை.

ஓதியும் என்ற விடத்து உம்மை தொக்கது.

பேதையார் என்னுமிடத்து ஆர் விகுதி இழிவினைக் குறிக்கும். பிறர்க்குரைத்தும் என்றமையால் இக்குறள் சிறப்பாகப் பிராம்மணரைப் பற்றியது. “மறப்பினு மோத்துக் கொளலாகும்” என்னும் (41-வது) குறள் ஈண்டு நோக்கத்தக்கது.

**100. வழிநோக்கான் வாய்பன் செய்யான பழி (நோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது**

*வழி = தர்ம சாஸ்திரங்களை, நோக்கான் = படியாமலும், வாய்ப்பன = (அவற்றில்) கூறப்பட்ட விதிகளை செய்யான் = அனுஷ்டிக்காமலும், பழி = பாவம் (நேரிடுமென்று) நோக்கான் =*

பயப்படாமலும், பண்பு = நற்குணங்களை, இலன் = உடைத்தாயிராமலும் இருப்பவன் பற்றார்க்கு = பகைவரால் (தீங்கு செய்யப்பட), இனிது = எளிதாக ஆவான்.

தர்ம சாஸ்த்ரங்களைக் கற்று, அறமுறைப்படி நடந்து, பழிபாவத்திற்கஞ்சுபவனைப் பகைவர் எளிதில் வெல்ல முடியாது என்பது குறிப்புப் பொருள்.

## 101. பகையென்னும் பண்பி லதனை யொருவன் நகையேயும் வேண்டற்பாற் றன்று

ஒருவன், பகை = விரோதி, என்னும் = என்ற, பண்பிலதனை = கெட்ட பொருளை, நகையேயும் = விளையாட்டிற்காகவும், வேண்டற்பாற்று அன்று = விரும்பிக் கொள்ளக் கூடாது.

## 102. ஏந்திய கொள்கையார் சீறினிடை முரிந்து வேந்தனும் வேந்து கெடும்

ஏந்திய கொள்கையார் = சிறந்த தவமுடையார், சீறின் = கோபித்தால், (அது) வேந்தனும் = தேவேந்த்ரனையும், இடை = இடம், முரிந்து = கெட்டு, வேந்து = அரசத்தன்மையை, கெடும் = கெடச் செய்யும்.

ஈண்டு ஐந்தவித்தானாற்றல் அகல்விசும் புளார்கோமான் இந்திரனே சாலுங்கரி என்னும் (12வது) குறள் ஒப்பிடத்தக்கது.

ஆகையால் ஏந்திய கொள்கையரும் அரசரும் சேர்ந்து நாட்டை ஆளவேண்டுமென்பது அறியத்தக்கது. ஏந்திய கொள்கையரை பஹு ஸ்ருத: என்ற சொல்லால் சாஸ்த்ரம் குறிக்கும்.

# தமிழ் பாகவதம்

தொகுப்பு : வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்

41. துருவனின் தவத்தினால் பயந்த தேவர்கள் அவன் தவத்தை தகர்க்க முடிவு செய்து, பூதங்களை (பஞ்ச பூதங்களான விண், மண், காற்று, நீர், நெருப்பு) ஏவினர்.

42. பக்தி யோகத்தால் நாராயணன் நாமத்தை ஸதா ஸர்வ காலமும் பாராயணம் பண்ணி நல்ல மனப்பக்குவம் பெற்று, அவனை லோகேச்வரர்களாகிய (அஷ்டதிக் பாலகர்) தேவர்கள் தகர்க்க முடியாது).

43. தேவர்கள் வேறு வழியின்றி பகவானை சரணடைந்து, ‘ஸ்வாமி ஒரு சிறிய பாலகன் யமுனையின் கரையில், மன உறுதியோடு தேவர்களாலும், தாங்க முடியாத கடுந்தவம் புரிகிறான்.’

44. ‘அவனுடைய கொடிய, யாராலும் தகர்க்க முடியாத தவத்தால், நாங்கள் மூர்ச்சை அடைந்தவர்களாய் உம்மைச் சரணம் அடைந்திருக்கிறோம்’ என்றனர்.

45. பகவான் சொன்னார். ‘என்னையே எல்லாம் என்ற ஆச்ரயித்தவர்கள் சாதுக்களுமான பெரியோர்களை, அஹங்காரம் இல்லாத அவர்களை யாரும் தடையை உண்டாக்கி தகர்க்க முடியாது.’

46. தடையே இல்லாத பக்தியோகத்தை (நிச்சலாபக்தி) மனஉறுதியோடு கடைப்பிடித்து, வேறு நிட்டையின்றி பக்தி ஒன்றினாலேயே என்னைத் தன் வயம் ஆக்கிக் கொள்கின்றனர்.

47. உன் மனதால் என்னையே சரணாகதி பண்ணியவர்களை விக்னேச்வரன் கூட தடை செய்ய முடியாமல் நான் காப்பாற்றுவேன்.

48. கவலைப்படாதீர்கள். நானே துருவன் இருக்கும் இடம் தேடி முறையாகச் சென்று, அவனுக்குப் ப்ரியத்தைக் கொடுத்து, மீண்டும் அரண்மனைக்கு அனுப்பி வைக்கிறேன்.

இப்படிச் சொல்லிவிட்டு எம்பெருமான் துருவன் இருந்த இடம் சென்று,

49. உத்தானபாதன் மகனே! உனக்கு மங்களம் உண்டாகட்டும். உன்னுடைய தவத்தினால் நாம் மிகவும் மகிழ்ந்திருக்கிறோம். உனக்கு வேண்டிய வரம் அருள வந்திருக்கிறோம். வேண்டும் வரத்தைக் கேட்பாய்! நற்றவனே!

50. வெளியுலக தொடர்பை விரும்பாதவனாய், என்னிடத்திலேயே மனதை வைத்தவனாய் உனது தவத்தை முடித்தவனாதலின் நான் மிகவும் மகிழ்ந்திருக்கிறேன். உயர்ந்த வரத்தைக் கேள்.

51. எம்பெருமானால் இப்படிச் சொல்லப்பட்ட வார்த்தையைக் கேட்டு, கண்ணை விரித்து தன் ஞானத்தால் கண்ட ஹரியாம் பரம்பொருளைக் கண்டான்.

52. ஐந்து ஆயுதங்களான சங்கம், சக்கரம், கதை, வில், வாள் இவைகளை ஏந்திய மகுடத்தோடு கூடிய பகவானைப் பார்த்து, தலையால் வணங்கினான்.

53. உடல் புளகித்தவனாய் துருவன் உடனே பரபரப்பும் அடைந்து, தேவாதி தேவனான அவனை துதிக்க வேண்டும் என்று மனதில் எண்ணினான்.

54. என்ன சொல்லுவேன், எந்த வார்த்தையால் அவனை துதிப்பேன் என்று மனக்கவலை கொண்டவனாய் அந்த எம்பெருமானையே சரணாகதி பண்ணினான்.

55. பகவானே ! என்னுடைய தவத்தால் தாங்கள் திருவுளம் மகிழ்ந்திருப்பீரானால், உம்மை துதிக்க விரும்பும் எனக்கு அதற்கான தெள்ளறிவைத் தந்தருள்வீராக.

56. ப்ரஹ்மா முதலியவர்களாலும், வேதம் தந்தும் இவை உணர்ந்தவர்களும், உம்முடைய நிலையைப் புரிந்து கொள்ள முடியாத போது, உம்மை நான் எப்படி துதிக்க முடியும்?

57. உம்மிடம் பக்தி செலுத்துவதன் நோக்கம், என் மனம் உம்மை துதிக்க விரும்புகிறது. விஷ்ணுவே அதற்கான தெள்ளறிவை அருள வேண்டும்.

58. பகவான் சங்கத்தால் அவனது கன்னப்பிரதேசத்தைத் தடவினான்.

அடுத்த கணம் ஓர் அதிசயம் நடந்தது.

ஆம் ! துருவன் மலர்ந்த முகத்தினால் உலகின் ஆதாரமான அந்த அச்சுதனை துதிக்க ஆரம்பித்தான்.

59. இவ்வுலகின் கண் பிரக்ருதி என்று வழங்கப்பெறும். பூமி, நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், மனம், புத்தி இவைகளின் ஸ்வரூபமாய், அவைகளுக்குக் காரணமாய் விளங்குகின்ற பகவத் ஸ்வரூபத்திற்கு நமஸ்காரம்.

(தொடரும்)

# ஸ்ரீமத் தேவி பாகவதம் - 2

பி.ஆர்.கண்ணன்

## ஸ்ரீமத் தேவி பாகவத மாஹாத்மியம்

### ஸுத்யும்னனுக்கு அனுக்ரஹம்



ஒரு சமயம் ஸுப்பிரமணிய ஸ்வாமியானவர் அகஸ்திய மஹரிஷியிடம் தேவியின் மஹிமையை விஸ்தாரமாக எடுத்துரைத்தார். அவர் கூறினார்:

**‘ஸ்ரீபாகவதமாஹாத்ம்யம் கோ**
**வக்தும் விஸ்தராத் க்ஷம: ।**
**ஸ்ருணு ஸம்க்ஷேபதோ ப்ரஹ்மந்**
**கதயிஷ்யாமி ஸாம்ப்ரதம் ।।**
**அதஸ்தத்வாங்மயீ மூர்த்தி:**
**தேவீபாகவதே முநே ।**
**படநாச்ச்ரவணாத்யஸ்ய ந கிஞ்சிதிஹ**
**துர்லபம் ।।‘**

‘ஸ்ரீ தேவி பாகவதத்தின் பெருமையை விரிவாகச் சொல்ல யாரால் முடியும்? பிரம்ம ரிஷியே, நான் சுருக்கமாக இப்போது சொல்கிறேன். முனிவரே, தேவியின் மூர்த்தியே தான் ஸ்ரீதேவிபாகவத கிரந்தம். அதைப்படித்தாலோ, சிரவணம் செய்தாலோ, கிடைக்காதது எதுவுமே இல்லை.‘ எந்த மனுவின் ராஜ்யம் தற்போது நடந்து கொண்டிருக்கிறதோ, அந்த வைவஸ்வத மனுவைப்பற்றிய சரித்திரத்தைக்கூறி, தேவியின் பெருமையைச் சொல்லி ஆனந்தித்தார். புத்திரபாக்கியம் இல்லாத மனு, வஸிஷ்டர் தலைமையில் யாகம் செய்தார்; ஆனால் புத்திரி தான் பிறந்தாள். இலா என்று பெயர் வைத்தார்கள். மனுவின் பத்தினி, ஹோதா என்ற ரித்விக்கிடம் தனக்கு புத்திரியே வேண்டும் என்று பிரார்த்திக்கவே, அதனால் ஹோதாவானவர் அவ்வாறே ஸங்கல்பித்ததன் விளைவாகப்

புத்திரி பிறந்தாள் என்று வஸிஷ்டர் உணர்ந்தார். வஸிஷ்டர் பரமேஸ்வரனைப் பிரார்த்தித்து, பெண்ணைப் பிள்ளையாக மாற்றும்படி அனுக்ரஹம் பெற்று, இலா என்ற பெண் இப்போது ஸுத்யும்னன் என்ற ஆண்பிள்ளையானான். யௌவனப்பருவமடைந்த ஸுத்யும்னன், ஒருசமயம் ஒரு காட்டிற்குள் புகுகையில், அவனும், கூட இருந்த எல்லோரும் ஆச்சரியமாக பெண்ணாக மாறினர். சிவன் அப்போது பார்வதியுடன் அக்காட்டிற்குள் இருந்தார். யார் காட்டில் நுழைந்தாலும், அவர் பெண்ணாவர் என்று சிவன் விதித்திருந்ததால் இவ்வாறு ஆயிற்று. பிறகு, பெண்ணாகிய ஸுத்யும்னன் காட்டிற்கு வெளியே, புத பகவானைப் பார்த்து ஆசை கொண்டு, இருவருக்கும் புரூரவஸ் என்ற புத்திரன் பிறந்தான். கொஞ்ச காலம் கழிந்து, பழைய நினைவினால் துக்கமுற்ற ஸுத்யும்னன், அரண்மனைக்கு வந்து, வஸிஷ்டரைச் சந்தித்து பழையபடி ஆணாக வேண்டுமென்று பிரார்த்திக்கவே, வஸிஷ்டர் தபஸினால் சிவ பார்வதியை சந்தோஷப்படுத்தி, அவர்கள் தரிசனம் தந்தனர். சிவன், ஒரு மாதம் ஆணாகவும், ஒரு மாதம் பெண்ணாகவும் மாறி மாறி இருக்குமாறு வரம் தந்தார். ஒரு ராஜாவுக்கு இந்த நிலை ஏற்றதாக இல்லையே என்று வருத்தப்பட்ட வஸிஷ்டர், சிவன் கூடவே இருந்த அம்பாள் வரம் கொடுக்கும் எண்ணத்தில் இருந்ததைக்கண்டு, அம்பாளிடம் பிரார்த்தித்தார். 'ஸம்ஸாரஸாகரோத்தார போதீபூதபதாம்புஜே ந' 'ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்ட படகாக இருக்கும் பாதாரவிந்தங்களைக் கொண்டவளே' என்றெல்லாம் ஸ்தோத்திரம் செய்தார். தேவியும் மனமிரங்கி உபாயத்தைக் கூறியருளினாள்: 'வரும் ஆஸ்வின சரத் (புரட்டாசி) நவராத்திரியில் ஜகதம்பிகையை நவராத்திரி விதானப்படி பூஜித்து, தேவி பாகவத்தை ஸுத்யும்னன் சிரவணம் செய்யும்படி செய்வாயாக' என்று. வஸிஷ்டர் அவ்வாறு ஸுத்யும்னனுக்கு தேவிபாகவதத்தை உபதேசித்தார். இலாவும் ஸுத்யும்னனாகவே மாறி, ராஜ்ய பரிபாலனம் செய்து, பிறகு வனம் சென்று, நாரதரிடமிருந்து தேவியின் நவாக்ஷரி மந்திரத்தை உபதேசமாகப் பெற்று, தபஸ் செய்து, தேவிலோகப்பிராப்தி அடைந்தான். கதையைச் சொன்ன ஸுப்ரமணிய ஸ்வாமி, இந்த கதையின் சிரவணத்திற்கே பலஸ்ருதியாக, இகலோக சௌக்கியமும், இறுதியில் தேவிலோகப்பிராப்தியும் கிடைக்கும் என்று அருளினார்.

### ரைவதன் மனுவானார்

ஸுப்ரமணிய ஸ்வாமி தொடர்ந்து வேறொரு கதையைச் சொன்னார். ரிதவாக் (ஸத்தியம் பேசுபவர் என்று பொருள்) என்ற முனிவருக்கு வெகுகாலம் சென்று புத்திரபாக்கியம் கிடைத்தது. பிள்ளை வெகுதுஷ்டனாக இருந்ததைக் கண்ட முனிவர் மிகவும்

வருந்தினார். 'கெட்ட புத்திரனால் குலம் அழிந்தது, புகழ் போயிற்று; இகலோக துக்கமும், பரலோக நரகமுமே கண்டது' என்று அங்கலாய்த்தார். கர்க மஹரிஷியிடமிருந்து, புத்திரன் துஷ்டனாக இருந்ததன் காரணம், முனிவர் தர்மமார்கத்தில் உறுதியுடன் நின்றிருந்தும், புத்திரன் ரேவதி நக்ஷத்திரத்தின் கடைசி பாகத்தில் பிறந்ததுதான் என்று அறிந்தார். மஹரிஷியின் உபதேசப்படி, துர்க்கையைப் பிரார்த்தித்து மனச்சாந்தி அடைந்தார். எனினும், கோபத்தினால் ரேவதி நக்ஷத்திரத்தைச் சபித்தார். நக்ஷத்திரம் ஆகாசத்திலிருந்து உடனே கீழே குமுதமலைமீது விழவே, ஒரு அழகிய கன்னிகையாக ஆனாள். பிரம்ம ரிஷியாகிய பிரமுசர் கன்னிகையைக் கண்டு, ரேவதி என்று பெயரிட்டு, தானே வளர்த்தார். விவாக வயதில் சரியான வரனுக்காக அக்கினி பகவானிடம் பிரார்த்தனை செய்தார். அக்கினி பகவான் சொல்படி, அந்த க்ஷணமே அவருடைய ஆசிரமத்திற்கு தற்செயலாக வந்த துர்தமன் என்கிற ராஜாவிற்கு விவாகம் செய்ய முற்பட்டார். அப்போது, பெண் ரேவதியின் பிடிவாதமான வேண்டுதலின் பேரில், ரேவதி நக்ஷத்திரத்தை ஆகாசத்தில் மறுபடியும் அந்த க்ஷணமே ஸ்தாபனம் செய்து, ரேவதி நக்ஷத்திரத்திலேயே, உடனேயே ஆசிரமத்திலேயே விவாகம் செய்து முடித்தார். பத்தினியுடன் கிளம்பிய துர்தமன், தான் ஸ்வாயம்புவ மனு வம்சத்தை சேர்ந்தவன் என்று சொல்லி, தனக்கும், பத்தினி ரேவதிக்கும் பிறக்கப்போகும் புத்திரன் மன்வந்தராதிபனாக வர வேண்டும் என்கிற அனுக்ரகத்தைப் பிரார்த்தித்தான். பிரமுச ரிஷி ராஜாவிடம், தேவிபாகவதத்தை ஐந்து தடவை சிரவணம் செய்யுமாறு அறிவுறுத்தினார். ராஜாவும் அவ்வாறே, லோமச மகரிஷியின் மூலம் தேவிபாகவதத்தை சிரத்தையாக முறைப்படி ஐந்து தடவை சிரவணம் செய்தான். அவனுக்கும் ரேவதிக்கும் பிறந்த புத்திரன் ஐந்தாவது மனுவாக ரைவதன் என்கிற பெயருடன் திகழ்ந்தான். ரைவதன் வீரியத்திற்கும், தர்மத்தில் தான் நிலை நிற்பதற்கும், தர்மோபதேசத்தினால் பிரஜைகளை தர்ம நெறியில் பிறழாதிருக்கும்படி செய்வதற்கும் பெரும்புகழ் பெற்றான்.

### சிரவணத்தின் பெருமை

ஒரு தடவை தேவி பாகவதம் சிரத்தையுடன் கேட்ட வஸுதேவருக்கு ஸாக்ஷாத் கிருஷ்ண பகவானே திரும்பக் கிடைத்தார். அதேபோல் ஒருதடவை கேட்ட ஸுத்யும்னன் புருஷனாக மாறி, பின்னர் தேவியின் அருளால் முக்தியையே பெற்றான். ஐந்து தடவை கேட்ட துர்தம ராஜாவிற்குப் பிறந்த புத்திரன் அவன் விருப்பப்படி ஐந்தாவது மனுவாக ரைவதன் என்கிற பெயரில் பெரும் புகழுடன் திகழ்ந்தான். ஒன்பது

தடவை சிரவணம் செய்பவன் தேவியின் அருளால் ஜீவன் முக்தனாகவே ஆகிவிடுவான்.

மாகாத்மியம் சொன்ன ஸூத பௌராணிகர் கதை சொல்பவர், கேட்பவர் எல்லோருமே மிக்க பக்தி சிரத்தையுடன் ஈடுபடவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். கதைக்கு இடைஞ்சல் செய்பவர் தேவியின் கோபத்திற்குப் பாத்திரமாவர். நதிகளுள் கங்கை போல, தேவர்களுள் சிவனைப்போல, காவியங்களுள் ராமாயணம் போல, ஒளிபொருந்தியவைகளுள் சூரியன் போல, மன குதூகலம் அளிப்பவைகளுள் சந்திரன் போல, செல்வங்களுள் புகழ் போல, பொறுமைசாலிகளுள் பூமியைப்போல, கம்பீரத்தில் ஸமுத்திரம் போல, மந்திரங்களுள் காயத்திரி மந்திரம் போல, பாபங்களைத் தொலைப்பதில் விஷ்ணு ஸ்மரணை போல, ஸ்ரீமத்தேவி பாகவதம் 18 புராணங்களுள் ஸர்வச்ரேஷ்டமானது. ஸ்ரீதேவிபாகவதம் எல்லா தர்மங்களையும் பறை சாற்றுகிறது; தேவியே ஹிமவானுக்கு உபதேசிக்கும் தேவிகீதை வேதாந்தஸாரமாகத் திகழ்கிறது; காயத்திரி மந்திர மகிமை வெகுவாகச் சொல்லப்பட்டுள்ளது; தேவியின் பல லீலைகளும், தேவியின் வாஸஸ்தானமான மணித்வீபமும் வர்ணிக்கப்பட்டுள்ளன.

(வளரும்)

## சனாதன தர்மப் புதிர்கள் அக்டோபர் விடைகள்

1. ப்ரம்மம் இப்படி அழைக்கப்படுகிறது
2. தக்ஷசீலம்
3. த்ராக்ஷாராமா ஆந்த்ரம்
4. ஹரிவம்சம்
5. தஞ்சாவூர் பெரிய கோபுரம்
6. பூர்ணா
7. ஹரதத்த சிவாசார்யார்
8. ஹயக்ரீவர்
9. குமரகுருபரர்
10. ரிஷிபஞ்சமீ

## சனாதன தர்மப்புதிர்கள் நவம்பர் வினாக்கள்

1. முருகனின் யானையின் பெயர்
2. ஐம்படைத்தாலி என்ன ?
3. லக்ஷ்மீ எந்தரிஷியின் புதல்வி
4. ஜீலம் நதிக்கரையில் அமைந்துள்ள நாடு
5. ராமருக்குத்தாடகை க்ருஷ்னருக்கு?
6. திருமூலர் சொல்லும் மூலகுரு யார்?
7. ஸ்ரீசக்ரம் தாடங்கமாக உள்ள இடம்
8. சிவபெருமானின் விடங்கஸ்தலங்கள் எத்தனை ?
9. இரணிய வதைப்படலம் எழுதியது யார்?

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 18

## ஸ்ரீ மஹா பெரியவாள் ஸந்நிதியில் ஒரு ஸம்பவம்

நான் காஞ்சி ஸ்ரீ மஹாபெரியவாள் தர்சனத்திற்காக அடிக்கடி போவது உண்டு. அன்று நானும், என் மனைவி சாவித்ரியும் எங்கள் பெண் உஷாவும், ஸ்ரீ மடத்திற்குக் காலை சுமார் 9.30 மணிக்குச் சென்றோம். நாங்கள் ஸ்ரீ மஹா பெரியவாளைத் தரிசனம் பண்ணும் பாக்யம் பெற்று மிக்க மகிழ்ச்சி அடைந்தோம்.



அந்த ஸமயம் ஒரு முஸ்லீம் அன்பர் தன்னுடைய மகன் குலாம் தஸ்தகீர் என்பவரை அழைத்துக் கொண்டு வந்தார். பாவம், குலாம் தஸ்தகீருக்கு இரண்டு கண்களும் தெரியவில்லை. அவர் கையில் ஒரு வயலின் இருந்தது. இருவரும் தங்கள் சட்டைகளைக் கழற்றினார்கள். ஸ்ரீ மஹா ஸ்வாமிகளை நமஸ்கரித்தார்கள்.

தன்னுடைய மகன் குலாம் தஸ்தகீர் ஒரு வயலின் போட்டியில் கலந்து கொள்ளப் போவதாகவும், அதற்கு ஸ்வாமிகள் ஆசீர்வதிக்க வேண்டுமெனவும் விண்ணப்பித்துக் கொண்டார். அவர் மேலும் தன் மகன் ஸ்ரீ பெரியவாள் ஸந்நிதியில் வயலின் வாசிக்கவும் அனுமதி கோரினார். ஸ்ரீ பெரியவாள் அனுக்ரஹித்து பக்கத்தில் இருந்த சிஷ்யாள் மூலம், குலாம் தஸ்தகீரை வயலின் வாசிக்கும்படி சொன்னார்.

தஸ்தகீர் வயலின் வாசித்தார். ஸ்ரீ பெரியவாள் மிகவும் பரிவுடன் தகப்பனாரை, அவர் ஊர் பற்றியும், அவருக்கு எத்தனை குழந்தைகள் என்பது பற்றியும் விசாரிக்கச் சொன்னார்கள். அவர் தனக்கு 2 பையன்களும், 1 பெண்ணும் இருப்பதாகவும் குலாம் தஸ்தகீர் மூத்த மகன் என்பதையும் சொன்னார்.

பிறகு ஸ்ரீ பெரியவாள் 2 வேஷ்டிகள் கொண்டுவரச் சொல்லி அதைத் தன் கையால் தொட்டுக் கொடுத்து, அவர்களிடம் கொடுக்கச் சொன்னார்கள். 2 மாம்பழங்களும் கொடுத்தார்கள்.

குலாம் தஸ்தகீரும், அவர் தகப்பனாரும் ரொம்ப சந்தோஷப்பட்டார்கள். ஸ்ரீ ஸ்வாமிகள் மறுபடி குலாம் தஸ்தகீர் யாரிடம் வயலின் சிக்ஷை பயின்றார் என்று கேட்கச் சொன்னார்கள். அதற்குத் தகப்பனார் பதில் சொல்லிப் பையனுடைய வயலினை ஸ்ரீ பெரியவாள் தொட்டுக் கொடுக்க வேண்டும் என்று சொல்ல, ஸ்ரீ பெரியவாளும் சந்தோஷத்துடன் தொட்டுக் கொடுத்து அருள் பாலித்தார்கள்.

பிறகு இருவரும் ஸ்ரீ பெரியவருக்குச் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணினார்கள். பெரியவாள் அனுமதி பெற்று அங்கிருந்து புறப்பட்டார்கள்.

இந்த வினோதமான ஸம்பவத்தை அங்கிருந்த அனைவரும் கண்டு ஆச்சர்யப்பட்டார்கள். ஸ்ரீ பெரியவாள் கருணையே கருணை ! அவர்களுக்கு ஈடு இணையாக யாரையும் சொல்ல முடியாது. ஸ்ரீ மஹா பெரியவாள் ஜாதி, மத, பேதம் இல்லாமல் அனைவருக்கும் அருள்பாலிக்கும் தெய்வம் அன்றோ! ஏழை எளியோருக்குக் கருணை பொழிந்த, இந்த ஸம்பவம் என் மனதைவிட்டு அகலவே இல்லை.


"ஸ்ம்ருதி முக்தாபலம்" என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது. 1.வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2.ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3.ஆஹ்னிககாண்டம் உத்தரபாகம் , 4.ஆசௌசகாண்டம், 5.ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6.ஸ்ராத்தகாண்டம் உத்தரபாகம், 7.திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்தகாண்டமும் என்ற 7 பாகங்கள்சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப்பெறுகின்றது.ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500

கூரியர் தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்

தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்

9600543996,7904244054, 9003845456,9710765203

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும் ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# புராணக் கதை

காஞ்சி வாதூலன்

## விளையாட்டு வினையானது

சர்யாதியின் பெண் ஸுகன்யா விளையாட்டாக ஸ்யவனரிஷியின் கண்களை தர்பைப் புல்லினால் குத்தி குருடாக்க அதற்கு பிணையாக அவளை மணமுடிக்கிறார். ஸுகன்யா மரவுரி தரித்து தன் தந்தையை ஊருக்கு அனுப்புகிறாள். ஸ்யவனரை மணம் செய்தவுடனேயே அரசனுக்கும் அவளுக்கும் மற்றவர்களுக்கும் இருந்த தாபம் திகில் மறைந்தது. எவ்விதமான வருத்தமும் இல்லாமல் அவள் தன் வாழ்க்கையை நடத்தினாள். காலை ரிஷிபுங்கவரை ஸ்னானம் செய்வித்து ஹோம த்ரவ்யங்களை எடுத்து வைத்து ஹோமம் செய்விப்பாள், பகல் உணவிற்குப் பிறகு அவரை ஓய்வெடுக்க வைப்பாள். மாலை மீண்டும் ஹோமங்கள், ஸ்வாத்யாயம், பின்பு இரவு உணவு உண்டபின் சயனம் தயார் செய்து அவரை படுக்க வைத்து இனிய குரலில் பாடி மகிழ்விப்பாள். மீண்டும் மறு நாள் வைகறைத் துயிலெழுதல் இத்யாதி வேலைகள். இப்படியே பல வருடங்கள் எந்த வருத்தமும் இல்லாமல் போய்க் கொண்டிருந்தது அவள் வாழ்க்கை.

ஒரு நாள் ஒரு விபரீதம் நிகழ்ந்தது

அஸ்வினீ தேவர்கள் ஸ்யவனரின் ஆஸ்ரமம் வழியாக ஒரு நாள் போக நேர்ந்தது. வந்தது வினை. அவளின் அழகில் மனம் பறி கொடுத்த அஸ்வினீ குமாரர்கள் ‘‘ ஆரனங்கே நீ யார்? இக்காட்டில் தனியாக ஆஸ்ரமத்தில் இருப்பதேன்? ஆரணங்கே நீ தேவலோக பெண்ணா?, கந்தர்வப் பெண்ணா?, அப்சரஸா? எங்கள் மனம் மாறுகிறது. உன் தனிமை உன்னை வாட்டவில்லையா? உன் பாதம் இக்கானகத்தில் படலாமா? நீ யார்?’’ என்று காதல் போதை தலைக்கேற வினவினர்.

அவளும் அவர்களிடம் ‘‘நான் சர்யாதியின் பெண், ஸ்யவன ரிஷியின் மனைவி, குருடரான அவருக்கு பணிவிடை செய்கிறேன்’’ என்று கூறி அவர்களுக்கு அதிதி ஸத்காரம் செய்தாள். கிழவரான, குருடரான ரிஷியையும் சுந்தரமே உருவான அவளையும் பார்த்து இது பொருந்தாத மணமாயிருக்கிறதே என்று நினைத்து ‘‘தேவீ இதுவா உன் திருமணம். கிளியை பூனைக்குத் தந்தாரா உன் தகப்பன். அறியாமையால் இப்படி நிகழ்ந்ததா? இது உனக்கு எக்காலத்திலும் பொருந்தாது. இப்போதே எங்களில் ஒருவரை

மணம் செய்து கொள், கிழக் குருட்டுக் கணவரை விடு'' என்றனர். கோபம் கொப்பளிக்க அவள் 'நீங்கள் தேவர்களாகவே இருங்கள். ஒரு பெண்ணை பார்த்து பேசும் பேச்சா இது. என் கணவர் எப்படிப்பட்டவரானாலும் இருக்கட்டும். அவரே என் பதி இங்கிருந்து போய் விடுங்கள்'' என்றாள். அதிர்ச்சி அடைந்த அவர்கள் ''உன் பதிபக்தியை மெச்சினோம். வரம் கேள்'' என்றனர். அவளும் என்பதிக்கு பார்வை கிடைக்க வேண்ட அவர்கள் ''நீ உன் பதியை இக்குளத்தில் ஸ்நானம் செய்யச் சொல், அவருக்கு குருடும் நீங்கும் கிழட்டுத்தன்மையும் நீங்கும்'' என்றுகூற அவர்களின் சூதை அறியாத பேதை சுகன்யா ஸ்யவன்ரிடம் இதைக்கூறினாள். அவரும் நகைத்துக் கொண்டே குளத்தில் மூழ்கி எழுந்தார். என்ன ஆச்சர்யம் இன்னொரு அஸ்வினீ தேவனாக வந்தார். சுகன்யா மருண்டாள்.

அஸ்வினீ தேவர்கள் ''ஆரணங்கே எங்கள் மூவரில் யார் உன் கணவரோ அவரைத் தேர்ந்தெடு'' என்று கூற பதறிப்போன சுகன்யா ''எந்த தேவீ புத்திரூபமாகவும் சகலரூபமாகவும் உறைகிறாளோ அவள் என் உண்மையான பதியைக் காண்பிக்கட்டும் என்று மனமுருகிப் ப்ரார்திித்தாள். அவளின் ப்ரார்த்தனை பலித்தது. பராசக்தி அவளின் உள் மனதில் உண்மையைக் காண்பிக்க தன் உண்மையான பதியை தேர்ந்தெடுத்தாள். அஸ்வினீ தேவர்கள் விழி பிதுங்கினர். ''மகேஸ்வரனின் பத்னி எப்படி ஸதீ என்றழைக்கப்படுகிறாளோ நீயும் உன் பதிவ்ரதா தர்மத்தினால் ஸதிசுகன்யா என்று அழைக்கப்படுவாய்' என்று ஆசீர்வதித்து வெளியேறினர். தன் பதிவ்ரதா வ்ரதத்தால் சுகன்யா என்றாலே ஸதிஸுகன்யா எனும் பெயர் வழங்கி வருகிறது.

(தொடரும்)

**கலை(ந்த்)ச்சொற்கள்**
**நவம்பர் வினாக்கள்**

1. விகபற்க நார்யக
2. ஸ்விங்தகடலங்ள்க
3. கேற்கறன்ட்டலி நலேறுன்
4. விண் உமைபிளம்
5. லபீஷயூரிஹ

**கலை(ந்த)ச்சொற்கள்**
**அக்டோபர் விடைகள்**

1. வாழ்க அந்தணர்
2. வினாயகர் அகவல்
3. ஈவது விலக்கேல்
4. கிராதார்ஜுனியம்
5. ஜயபேரிகை கொட்டு

# கார்த்திகை மாத ஸ்ரீமடத்தின் விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| 22/11/19 | வெள்ளி | ஏகாதசி |
| 23/11/19 | சனி | துவாதசி |
| 24/11/19 | ஞாயிறு | ப்ரதோஷ பூஜை |
| 26/11/19 | செவ்வாய் | அனுஷம் தேர் |
| 26/11/19 | செவ்வாய் | அனுஷம் பாராயணம் |
| 28/11/19 | வியாழன் | மூலம் தேர் |
| 30/11/19 | சனி | உத்ராடம் தேர் |
| 30/11/19 | சனி | உத்ராடம் பாராயணம் |
| 02/12/19 | திங்கள் | அவிட்டம் தேர் |
| 03/12/19 | செவ்வாய் | அவிட்டம் பாராயணம் |
| 08/12/19 | ஞாயிறு | ஏகாதசி |
| 09/12/19 | திங்கள் | துவாதசி |
| 09/12/19 | திங்கள் | ப்ரதோஷ பூஜை, பரணி தீபம் |
| 10/12/19 | செவ்வாய் | க்ருத்திகா தீபம் |
| 11/12/19 | புதன் | பௌர்ணமி பூஜை, ஸர்வாலய தீபம் |
| 22/11/19, 29/11/19, 06/12/19 - 13/12/19 வெள்ளிக்கிழமை பூஜை | | |

# வேதாந்த ஸாரம்

## ஸதானந்த் யோகிந்த்ரர்

வேங்கடகணபதி சர்மா

### ஸூக்ஷ்ம சரீத்தின் அமைப்பு

**அவயாவாஸ்து ஞ்யானேந்த்ரிய பஞ்சகம் புத்திமனஸீ**

**கர்மேந்த்ரிய பனஜகம் சேதி ॥ 62**

*புலன் ஐந்து புத்தி மனம் பொறிகள் ஐந்து ப்ராணங்கள் ஐந்து லிங்கசரீரம் என்பர்.*

**ஞ்யானேந்திரியாணி ஸ்ரோத்ர த்வக் சக்ஷுர்ஜிஹ்வா க்ராணாக்யானி ॥ 63**

*காது, தோல், கண், நாக்கு, மூக்கு இவை ஞ்யானேந்த்ரியம்.*

**ஏதானி ஆகாசாதீனாம் ஸாத்விக அம்சேப்யோ வ்ய்ஸ்தே**

**ப்யோ ப்ருதக் ப்ருதக் க்ரமேண உத்பத்யந்தே ॥ 64**

*இவைகள் ஆகாச பூதத்தின் ஸத்வ அம்சத்திலிருந்து தனித்தனியாக உண்டாகின்றன.*

**புத்திர்னாம நிச்சயாத்மிகாந்த:கரனவ்ருத்தி: ॥ 65**

*அந்தகரணம் எதை நிச்சயப்படுத்துகிறதோ அது புத்தி.*

**மனோ நாம ஸங்கல்ப விகல்பாத்மிக அந்தகரணவ்ருத்தி: ॥ 66**

*ஸங்கல்பம் விகல்பம் இவைகளுடன் இருக்கும் அந்தகரணம் மனம் எனப்படும்.*

**அனயோரேவ சித்த அஹங்காரயோர் அந்தர்பாவ: ॥ 67**

*சித்தம் அஹம்காரம் இவ்விரண்டும் மனம் புத்தி இரண்டில் உள்ளடக்கமே.*

**அனுஸந்தானாத்மிகாந்தகரணவ்ருத்தி: சித்தம் ॥ 68**

*நினைவை எது செய்கிறதோ அது சித்தம்.*

**அபிமானாத்மிக அந்தகரண வ்ருத்தி: அஹம்கார: ॥ 69**

*நான் என்று எது தெரிகிறதோ அது அஹம்காரம்.*

**ஏதே புனராகாசாதிகத ஸாத்விக அம்சேப்யோ மிலி**

**ஏதப்யோ உத்பத்யந்தே ॥ 70**

*இவைகளும் ஆகாச பூத ஸாத்விக அம்ச கூட்டினால் உண்டாகின்றன.*

**ஏதேஷாம் ப்ரகாசாத்மகத்வாத் ஸாத்விக அம்சகார்யத்வம் ॥ 71**

*இவைகள் ப்ரகாசமாயிருப்பதால் ஸாத்விக அம்சத்திலிருந்து வந்தவை எனப்படும்.*

**இயம் புத்திஞ்யானேந்த்ரியை: ஸஹிதா விஞ்யானமய கோசோ பவதி ॥ 72**

*ஞானேந்த்ரியங்களுடன் இருக்கும் புத்தி விஞ்யானமய கோசம் எனப்படும்.*

*(தொடரும்)*

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

‘‘ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்’’

# பித்ரார்ஜிதம்

அல்பஸ்ருதன்

## வணங்கும் சட்டங்கள்

### 9-6 சிவாகமம்

சிவாகமம் இருபத்தெட்டு. இவற்றில் சிவபேரம் பத்து, ருத்ரபேரம் பதினெட்டு. உப - ஆகமங்கள் இருநூற்றேழு உண்டாம். ஒவ்வொரு ஆகமத்திலும் நாலு பாதம்; சரியா பாதம்; கிரியா பாதம்; யோக பாதம்; ஞான பாதம் இவற்றில் சரியா பாதம் சிவாசாரியரின் ஒழுக்கத்தை விதிக்கிறது. காலை, நண்பகல், மாலை அவர் செய்ய வேண்டிய கிரியைகளை விளக்குகிறது. ஸ்நானம், ஜபம், தபம், ஆஹாரம், விஹாரம், விஹாரம், வேஷம், பூஷணங்களை விவரிக்கிறது. தெலுங்கில் கட்டு - ஜுட்டு - பொட்டு என்று கோவில் பூசை செய்வோர்க்கு மூன்று லட்சணம் கூறுவர். அரையில் கீழ்ப்பாச்சி சோமன், தலையில் கட்டுக் குடுமி, நெற்றியில் திருநீறு திருமண் தரித்திருத்தல் வேண்டும்.

### 9-7 சிவ பூஜை

கிரியா பாதம் சிவபூசை சடங்குகளை விவரிக்கிறது. சாதாரணமாக ஈசுவரன் கோவிலில் ஆறுகால பூஜை செய்கிறார்கள். 1. உஷக்காலம், 2. காலசந்தி, 3. உச்சிக்காலம், 4. சாயாரட்சை, 5. இரண்டாங்காலம், 6. அர்த்த ஜாமம். எல்லா ஆகமங்களிலும் இவை உண்டு. வீட்டிலானாலும், கோவிலிலானாலும் லிங்கத்துக்குத் தான் பூஜை. வாணாஸுரன் அன்றாடம் பூசித்து லிங்கங்களை ஆற்றில் விட்டு விடுவானாம். அவை இன்றும் ஆறுகளில் அகப்படுகின்றன. அதனால் அவற்றை பாணலிங்கம் என்கிறார்கள். பால், தயிர், நெய், தேன், இளநீர், தண்ணீர் இவைகளால் தனித்தனியே லிங்கத்துக்கு அபிஷேகம் செய்வார்கள். பஞ்சு நூலால் நெய்த கரைவேஷ்டிகளை லிங்கத்துக்கும், புடவைகளை அம்பிகைக்கும் சாற்றுவார்கள். வில்வ இலையினால் அஷ்டோத்தரம் (பதினெட்டு, நூற்றெட்டு, ஆயிரத்தெட்டு நாமாவளி), சொல்லி அர்ச்சனை செய்வார்கள். வெறுஞ் சோறு தான் நைவேத்யம் படைப்பார்கள்.

### 9-8 யோகம்

யோக பாதம் சிவபூசை முடிவில் தியான சமாதியால் சாட்சாத்காரம் பெறுவதை விவரிக்கிறது. ஞான பாதம் "ஸோஹம்", "அஹம் ப்ரம்மாஸ்மி," "தத் த்வம் அஸி" போன்ற மஹா வாக்யங்களைப் போலே ஜீவ ப்ரம் மைக்ய வேதாந்த ரஹஸ்ய ஞானத்தை, சிவன் ஆவதை, விவரித்துக் கூறுவது. சிவாசாரியர்கள் அரையில் பஞ்சகச்ச வேஷ்டியும் தலையில் கட்டு குடுமியும் கழுத்தில் ருத்ராட்ச மாலையும் நெற்றியில் விபூதி சந்தன குங்குமப் பொட்டுடன் சதா அலங்காரமாக இருக்க வேண்டும். மடியில் வெள்ளி சம்புடத்திலேனும், பட்டுப் பையிலேனும் பரிமளங் கலந்த திருநீற்றை வைத்துக் கொண்டு கேட்டவர்களுக்கு கேட்டவிடத்து வழங்குவதே குருக்கள் லட்சணம். இவர்கள் வேதங்களைக் கற்றிருத்தல் மரபு.

### 9-9 வைகாஸம்

வைகானஸ ஆகமம் இருபத்தெட்டு ஸம்ஹிதை. வைகானஸ ரிஷி பெருமானின் அவதாரமே என்று போற்றப்படுகிறார். அவருக்கு நாலு சிஷ்யர்கள்; அத்ரி, ப்ருகு, மரீசி, காச்யபர். அவர்கள் இந்த ஆகமத்தைப் பரவச் செய்தார்கள். விஷ்ணு ஆலயங்களில் ஐந்து வித சிலைகள் இருக்கும். 1. மூலவர் த்ருவ பேரம், 2. கௌதுக பேரம், 3. ஸ்நபன பேரம், 4. உத்ஸவ மூர்த்தி, 5. பலி பேரம். மூலவர் மரத்தால், கதையால், கருங்கல்லால் செய்யப்பட்டிருப்பார். மற்ற நாலு உருவங்களும் செம்பு உலோகங்களால் ஆனவை. தங்கத்திலும் இருப்பது உண்டு. (வானமாமலை; ஸ்ரீவில்லிபுத்தூர்) வைகானஸ அர்ச்சகர்கள் விகனஸ ரிஷி பரம்பரையில் பிறந்தவர்கள். அவர்களுக்கு நம்மைப் போல் இடது வலது புஜங்களில் சங்கு சக்கர முத்ர தாரணம் கிடையாது.

(தொடரும்)

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

**ஸ தஸ்மை ஸர்வமாசக்யாவானுபூர்வ்யேண பாண்டவ:**

*தர்மர் அவனுக்கு ஆதியோடு அந்தமாய் நடந்ததைச் சொன்னார்.*



**ததஸ்து தே கௌரவராஜபுத்ரா விபூஷிதா:**
**குண்டலினோ யுவான:**

**க்ருதாபிஷேகா; க்ர்தமங்கல்க்ரியா:வரஸ்த்ரியாஸ்தே**
**ஜக்ருஹு கரம் ததா ।।**

*பாண்டவர்கள் மங்கல ஸ்நானம் செய்து அலங்கரித்துக் கொண்டு த்ரௌபதியை மணந்தனர்.*

**ததச்ஸங்கர்ஷணாச்சைவ கேசவச்ச மஹாபல;**
**யாதவைஸ்ஸஹ ஸர்வைச்ச பாண்டசூவானபிஜக்மது:**

**ரேமிரே பாண்டவைஸ்ஸார்தம் தே பாஞ்சாலபுரே ததா. ।।**

*பின்பு பலராமருடன் க்ருஷ்ணரும் யாதவர்களும் பாஞ்சால நகரத்தில் விவாஹ உத்ஸவத்தைக் கொண்டாடினார்கள்.*

**விதுரஸ்த்வத தான் ஸ்ருத்வா த்ரௌபத்யா பாண்டவான் வ்ருதான்**
**வ்ரீடிதான் தார்தராஷ்ட்ரான் ச த்ருத்ராஷ்ட்ரம் (விசாம்பதே)**
**உவாச திஷ்ட்யா குரவோ வர்தந்த இதி விஸ்மித:**
**க்ருஷ்ணாயா ஸம்வ்ருதா:பார்தா: பூஜிதா த்ருபதேன ச ।।**

*பாண்டவர்கள் க்ருஷ்ணாயை மணம் முடித்தனர், கௌரவர்கள் தோல்வி அடைந்தனர் என்பதைக் கேட்ட விதுரர் அரசனிடம் நடந்ததைத் தெரிவித்து பாண்டவர்கள் த்ருபதனால் பூஜிக்கப்பட்டனர் என்று தெரிவித்தார்.*

**ஏதத் ஸ்ருத்வா து வசனம் விதுரஸ்ய நராதிப;**

**ஆகாராச்சாதனார்தாய திஷ்ட்யா திஷ்ட்யா இதி சாப்ரவீத் ॥**

*இதைக் கேட்ட அரசன் தன் உண்மையான எண்ணத்தை மறைத்து அதிர்ஷ்டம் அதிர்ஷ்டம் என்று கூறினான்.*

**ததோ துர்யோதனச்சாபி ராதேயச்ச (விசாம்பதே)**

**த்ருதராஷ்ட்ரமுபாகம்ய வசோஅப்ரூதாமிதம் ததா ॥**

*கர்ணனுடன் துர்யோதனும் அரசனை அணுகி சிலவிஷயங்களை சொன்னார்கள்.*

**ஸன்னிதௌ விதுரஸ்ய த்வாம் தோஷம் வக்தும் ந சக்னுவ:**

**விவிக்தமிதி வக்ஷ்யாவ: கிம் தவேதம் சிகீர்ஷிதம் ॥**

*அரசே விதுரன் முன்னிலையில் விமர்சனம் செய்ய தயக்கத்தினால் இப்போது தனிமையில் பேச விரும்புகிறோம். உன் விருப்பம் என்ன?*

**ஸபத்னவ்ருத்திம் யத்தாத மன்யஸே வ்ருத்திமாத்மன:**
**அபிஷ்டௌஷி ச யன் க்ஷத்து: ஸமீபே த்விபதாம் வர**
**தேஷாம் பலவிகாதோ ஹி கர்தவ்யஸ்தாத நித்யச: ॥**

*விதுரன் முன்னிலையில் நமது எதிரிகளான பாண்டவர்களை புகழ்கிறீர்கள். அவர்களுடைய பலத்தை அழிப்பதுதான் எங்கள் வேலை.*

**த்ருதராஷ்ட்ர:**

**அஹமப்யேவமேவைதத் சிகீர்ஷாமி யதா யுவாம்**

**விவேக்தும் நாஹமிச்சாமி த்வாகாரம் விதுரம் ப்ரதி ॥**

*உங்கள் எண்ணம் எதுவோ அதேதான் என் எண்ணமும். விதுரன் முன்னிலையில் சொல்ல வேண்டாமென்றிருக்கிறேன்.*

**பூய ஏவ து பீஷ்மச்ச த்ரோணோ விதுர ஏவ ச**
**யுவாம் ச குருதாம் புத்திம் பவேத் யா நஸ்சுகோதயா ॥**

*பீஷ்மர், த்ரோணர், விதுரர் இவர்களுடன் ஆலோசனை செய்து நமக்கு எது நன்மை என்று பாருங்கள்.*

*(தொடரும்)*

# ஹிந்து மத ப்ராமண நூல்கள்

ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா

## மஹாபாரதம்

### ஸாங்க்யம்



கபில மஹரிஷியால் ஆறு அத்யாயங்களாக எழுதப்பட்டது. இந்த ஸாங்க்ய சாஸ்திரம். இதில் பிரகிருதி, புருஷன் என்ற இரண்டில் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களின் ஸமாவஸ்தையான பிரகிருதியினிடமிருந்தே உலகம் தோன்றியது. புருஷன் தான் ஒன்றும் செய்யாதவன் என்றறிந்து வைராக்ய ஸம்பந்தனாயிருத்தலே துக்க நிவிருத்தி [சுகம்] ஆகும்.

### யோகம்

பதஞ்சலி முனிவரால் நாலு பாதங்களாகச் செய்யப்பட்டது யோக சாஸ்திரம். இதில் யமம், நியமம் முதலிய எட்டு அங்கங்களால் மனத்தை ஓரிடத்தில் நிறுத்துவது. யோக சித்தியினால் தூரத்திலுள்ள விஷயத்தை இங்கேயிருந்தே உணர்தல், ஆகாய மார்க்கத்திலும், ஜலத்திலும், கனவிலும் ஸஞ்சரித்தல், விரும்பியதைப் பெறல் முதலிய அணிமாதி அஷ்ட ஐச்வர்ய ப்ராப்தி முடிவில் மோக்ஷம் முதலியன கூறப்பட்டுள்ளன.

### பாசுபதம்

பசுபதியால் ஐந்து அத்யாயங்களாகச் செய்யப்பட்டது. இதில் பதி, பசு, பாசம் என மூன்றுண்டு. பசுவாகிய ஜீவன் பாசமாகிய பந்தத்தை விபூதி ருத்ராக்ஷதாரணம் பஸ்மஸ்நாதம் முதலியவைகளால் நீக்கி பதி என்ற பரமசிவனை அர்ச்சித்தல் மோக்ஷமாகும்.

### வைஷ்ணவம்

*இது நாரதர் முதலியவர்களால் அநுக்ரஹிக்கப்பட்டு பாஞ்சராத்ரம் என்றழைக்கப்படும். எல்லாவற்றிற்கும் காரணமான பகவான் ஸ்ரீ வாசு தேவர்களிடமிருந்து ஸர்கர்ஷணன் என்ற ஜீவனும் அவனிடமிருந்து ப்ரத்யும்நன் என்ற மனதும் அதிலிருந்து அநிருத்தன் என்ற அஹங்காரமும் உண்டாயின. மனோவாக் காயங்களால் எக்காலத்தும் பகவானை அர்ச்சித்துக் கொண்டிருப்பதே மோக்ஷம்.*

### ஸௌரம்

*சூர்யனை பிரதானமாகக் கொண்டது. சாக்தம், சக்தி என்று அம்பாளை ப்ரதாநமாகக் கொண்டது. காணபத்யமென்பது கணபதியை ப்ரதாநமாகக் கொண்டது. கபாலியைத் தொழுவது காபாலம். பாசுபதம் முதலியவர்களுக்கே ஷண்மதம் என்று பெயர். இப்படிப் பல பெயர்கள் கொண்ட மதங்களும் ஒரே கடவுளைப் பற்றியனவாம். யார் எம்மார்க்க வழியாகச் சென்றாலும் அவர் மத்யஸ்தராயும் நித்ய கல்யாண குண ஸச்சிதாநந்த ஸ்வரூபமாயுமுள்ள பகவானையே அடைகிறார்கள்.*

*(நிறைந்தது)*


॥ ஸ்ரீ: ॥

இனி பழைய புத்தகங்களை மீண்டும் Type செய்ய தேவையில்லை.

பழைய புத்தகங்கள் 20, 30, 50, 70 வருட புத்தகங்களை

Typing செய்யாமலே பிழைகளை திருத்தி புதிய வடிவில் (New font) மாற்றி

எல்லா மொழிகளிலும் (All Languages) அச்சிட்டு தரப்படும்.

க்ரந்தம், தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், கன்னடம்

எல்லா மொழிகளிலும் டைப் செய்து அச்சிட்டு தரப்படும்.

(Transliteration in all Languages done here.)

Grantham to Devanagiri, Grantham to Tamil,

மற்றும் வேத ப்ரமாண புத்தகங்கள் உபநிஷத்துக்கள்

உதாத்தம், அநுதாத்தம் இவற்றுடன்

அச்சிட்டு தரப்படும்.

**Contact : V.K.N. Enterprises (Printer)**

Mylapore, Chennai - 600 004 Phone : 98402 17036, e:mail : vknprinter@gmail.com

# ஸ்ரீ ஜயதேவரும் அவர் அருளிச் செய்த கீத கோவிந்தமும்

## பாகம்-2

8. இதற்கு அடிப்படை காரணம் என்னவென்றால் பரமாத்மாவுடன் இரண்டறக் கலக்க வேண்டும் என்ற மனிதனுடைய ஆத்மாவின் உள்ள கிடக்கையையும் படிப்படியாக முன்னேறி அதில் வெற்றி காண்பதையும், பரமானந்தத்தை அனுபவிப்பதையும் உட்கருத்தாகக் கொண்டு இக்காவ்யம் அமைக்கப்பட்டதேயாகும்.

9. இக்காவ்யம் ராதா என்பவளை ஜீவாத்மாவாகவும், ஸ்ரீ க்ருஷ்ணனை பரமாத்மாவாகவும் பாவித்து அவர்களின் ஐக்யத்தை ஜீவாத்மா பரமாத்மா ஐக்கியத்தை புகழ்ந்து போற்றி சிருங்காரரஸம் ததும்ப எழுதப்பட்டதாகும். ஸ்ரீ ஜயதேவர் பூரி ஜகன்நாதரை ராதாகிருஷ்ண ஐக்கியமாக பாவித்து இந்த மஹா காவ்யத்தைப் படைத்தருளினார்.

10. ஸ்ரீ ஜயதேவர் மாபெரும் கவியாக இந்தியா முழுவதும் கருதப்படுகிறார். அவருடைய சங்கீத அறிவும் சமஸ்கிருதத்தில் அவருக்கு உள்ள பாண்டியத்யமும் அவருடைய அஷ்டபதிகளின் வாயிலாகத் தெள்ளத் தெரிகின்றது. அவருடைய கவித்துவத்தைப் பாராட்டாத பண்டிதர்களே இல்லை. சொற்களின் கோர்வை மற்றும் பொருள் செறிவைப் பார்த்து அனைவரும் வியந்து பாராட்டுகிறார்கள். ஸர் எட்வின் ஆர்னால்ட் என்பவர் இக்கவிதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தது, அதைத் தொடர்ந்து ஜெர்மன், பிரான்சு மேலும் சில ஐரோப்ப மொழிகளில் மொழி பெயர்த்துள்ளதிலிருந்து கீத கோவிந்தம் என்ற காவ்யம் சிறந்த இலக்கியமாக உலகம் முழுவதும் போற்றப்படுகிறது.

11. இப்போது நாம் சில முக்கிய ஸ்லோகங்கள், அஷ்டபதிகள் அதன் பிண்ணனி ஆகியவைகளை அனுபவிக்கலாமே. ஸ்ரீ ஜயதேவரின் புகழ்பாடும் தியான ஸ்லோகங்களுக்கு பின்னர், முதல் ஸர்கத்தில் மேகைர் மேதுரமம்பரம் என்று தொடங்கும் முதல் ஸ்லோகம். காரிருள் கவ்வுகிறது வானில் மேக மூட்டம் காணப்படுகிறது. குழந்தை கிருஷ்ணன் அச்சப்படுகிறான். அவனை வீட்டில் கொண்டு போய் சேர். இவ்விதம் நந்த கோபன் உத்திரவுப்படி செல்லும் வழியில் யமுனை நதிக்கரையில் பக்தர்களிடையே ராதையும், மாதவனும் புரிந்த கேளிக்கைகள் ஜெயமடையட்டும் என்று மங்களா சாஸனம் செய்து கவிதையைத் தொடங்குகிறார்.

12. இவ்விடம் குழந்தை என்று கண்ணன் அழைக்கப்பட்டு மேலும் ராதையோடு கேளிக்கை புரிந்தான் என்று கூறியதிலிருந்தும் கண்ணனுடைய வயது மிகக் குறைவு என்பது ஊர்ஜிதமாகிறது. அவன் ராஸலீலா கேளிக்கை எல்லாம் தன் பத்து வயதிற்குள்

முடித்து விட்டான் என்றும் கூறப்படுகிறது. இதிலிருந்து ராஸ லீலை ஒரு தெய்வீகக் கேளிக்கை என்று சந்தேகமறத் தெரிகிறது. மேலும் 'பயக்ருத் பயநாசன' என்று பயத்தை உண்டாக்குபவனும், அப் பயத்தை அழிப்பவனும் அவனே என்றிருக்க கண்ணன் பயப்படுகிறான் என்ற விவரிப்பு. கண்ணன் குழந்தை ரூபத்தை ஏற்றது மட்டுமல்லாது, அக்குழந்தைக்குரிய குணங்களையும் வெளிப்படுத்தியுள்ளான் என்பது தெளிவாகிறது.

13. ஸ்ரீ ஜயதேவர் முதல் அஷ்டபதியில் பகவானின் பத்து அவதாரங்களை வர்ணித்துள்ளார். இதில் புத்த அவதாரத்தையும் சேர்த்துள்ளார். மேலும் இந்த பத்து அவதாரங்களையும் ஸ்ரீ கிருஷ்ணன் தான் செய்தார் என்று கூறுகிறார். முதல் அஷ்டபதியில் ஒவ்வொரு அவதாரத்தைப் பற்றி சொல்லும் போதும் 'கேசவா த்ருத' கேசவன் தரித்த என்று கூறி அந்த அந்த அவதாரத்தை வர்ணிப்பதன் மூலம் ஸ்ரீ கிருஷ்ணன் பூர்ண பரமாத்மா என்று எடுத்துக்காட்டுகிறார். மேலும் 'வேதானுத்தரதே' என்று தொடங்கும் ஸ்லோகம் 5-ல் தெளிவாக வராக அவதாரம் எடுத்து வேதத்தை மீட்டவனான ஸ்ரீ கிருஷ்ணன் பத்து அவதாரங்களை எடுத்தான். அவனுக்கு நமஸ்காரம். கிருஷ்ணாய துப்யம் நமஹ என்று கூறுகிறார்.

14. 'ஸ்ரித கமலா குச மண்டலா' என்று தொடங்கும் 2வது அஷ்டபதியில் 'தவ சரணே ப்ரணதாவயமிதி பாவய ஏ குருகுசலம் ப்ரணதேஷு ஜய ஜய தேவ ஹரே' என்று உன்னைச் சரணமடைந்தோம் என்று அறிவாயாக. சரணமடைந்த எங்களுக்கு நன்மை பயக்கச் செய் என்று சரணாகதி மஹத்வத்தை மார்ஜால பக்தி தத்துவத்தை விளக்குகிறார். மேலும் வஸந்தகால மேக வர்ணனை மஹாகவி காளிதாஸரின் மேகதூதத்தை நினைவு கூறுகிறது.

15. ஸ்ரீ ஜயதேவர் 10 ஸர்கம் 'வஸதி யதி கிஞ்சிதபி' என்ற 19வது அஷ்டபதி எழுதிக் கொண்டிருக்கும் போது 7வது சரணத்தில் அவர் கண்ணன் காதல் உன்மத்தம் கொண்டு ராதையிடம் பேசுவதாக உள்ள வரிகளில் அவர், ஸ்ரீ ஜகந்நாதரிடம் மனம் லயித்து தன்னை மறந்த நிலையில், 'கண்ணன் ராதையிடம் காதல் உன்மத்தம்' கொண்ட என் ஸிரஸில் உன் மிருதுவான பாதத்தை வைத்து அதை குளிரச் செய் என்று சொல்வது போல எழுதி விட்டார். பின் சுயநினைவுடன் அதைப் படித்தபின் திடுக்கிட்டார். என்ன அபச்சாரம் செய்துவிட்டேன். பரமாத்மா கண்ணனின் தலையில் ராதையின் பாதமா என்று வருந்தி அந்த வரிகளை நீக்கி வேறு விதமாக மாற்றி எழுத பல தடவை முயன்றும் முடியாமல் போயிற்று. எழுதுகோலை கீழே வைத்துவிட்டு கங்கையில் நீராடச் சென்று விட்டார். திரும்பி வந்ததும் எழுதுவதற்காக ஓலையை எடுத்தார்.

(தொடரும்)

# ஈச்வர தியானம்



நமக்கெல்லாம் மனம் என்று ஒன்று இருக்கிறது. மனத்தில் ஆசை உண்டாகிறது. பல விஷயங்களை அது நினைக்கிறது. அதனால் அநேக விதமான மனோநிலைகள் உண்டாகின்றன. பந்தத்தில் சிக்குவதற்கும், மோக்ஷம் என்னும் வீடு பெறவும் இந்த மனம் தான் காரணம். நாம் நமது மனம் எப்படி இருக்க வேண்டுமென நினைக்கிறோமோ அப்படி இருக்கிறதில்லை. நாம் ஒரு வஸ்துவை நினையென்றால் அது வேறு எங்கேயாவது போய் நிற்கிறது. அந்த மனம் சரி இல்லாவிட்டால் மற்ற இந்திரியங்கள் ஸௌக்கியமாக இருந்தாலும் ஒன்றும் செய்யமுடியாது. மனம் நன்றாக இருந்தால் தான் ஸகல இந்திரிகளும் வேலை செய்யும். பைத்தியம் பிடித்தவனுக்கு மனம் இஷ்டப்படி வேலை செய்வதில்லை. அதனால் அவனுக்கும் மற்றவர்களுக்கும் ஹிம்ஸை. மனம் நல்ல தன்மை குறைந்துவிட்டால் பைத்தியமாகிறது; பரம துக்கம் உண்டாகிறது. மனம் நன்றாக இருந்தால் பரமசாந்தி உண்டாகிறது. நம்முடைய மனத்தை உத்தம பதார்த்தத்தில் வைத்தால் உத்தமமான இன்பம் உண்டாகும். உத்தம பதார்த்தம் எது? பரமேச்வரன் தான் உத்கிருஷ்டமான வஸ்து. அவருடைய பாதம் நமக்கு உத்கிருஷ்டமானது. அந்தப் பாதத்தில் தான் மனத்தை வைக்க வேண்டும்; ஹ்ருதய கமலத்தில் தியானம் செய்ய வேண்டும். மனம் கெட்டுப் போய் எவ்வளவோ பாபம் செய்திருக்கிறோம். குழந்தையாக இருந்ததிலிருந்து ஈச்வர தியானம் செய்திருந்தால் இவ்வளவு நாள் எவ்வளவோ பாபம் போயிருக்கும். இப்பொழுதோ மேலும் மேலும் பாபத்தைச் செய்து கொண்டிருக்கிறோம். எத்தனை நாட்கள் ஈச்வர சரணாரவிந்த தியானம் செய்கிறோமோ, அவ்வளவு நாட்களும் நம்முடைய காரியத்தை நாம் பார்த்தவர்களாகிறோம். இந்த ஜன்மத்தை எடுத்ததற்குப் பலன் அதுதான்!

## ஆசையைக் கட்டுப்படுத்து

இந்திரியங்களால் நமக்குச் சில ருசிகள் உண்டாகின்றன. தானாக ஒரு ருசி ஏற்படுகிறது. அதைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டுப்படுத்த வேண்டும். பார்க்கவேண்டுமென்ற ஆசையிருக்கிற வரையில் பார்க்கிறவைகளில் சிலவற்றை நிறுத்திக்கொள்ள வேண்டும்; தின்னவேண்டுமென்ற ஆசையிருக்கிற வரையில் தின்பதில் பல பதார்த்தங்களை விலக்கி வைக்க வேண்டும். தொட வேண்டும் என்ற ஆசையிருக்கிற வரையில் சிலவற்றைத் தொடாமல் நிறுத்திக் கொள்ள வேண்டும். ''எதையும் தீண்டவேண்டும்'' என்ற ஆசையில்லாத நிலைமை வந்த காலத்தில் எல்லோரையும் தொடலாம். அதுவரையில் விலக்கப்பட்ட ஸாமான் வந்தால் நடுங்க வேண்டும். அவ்வளவு பழக்கம் ஏற்படும்படி விலக்க வேண்டும். நல்ல உணர்ச்சி என்பது அவசியம். எல்லாவற்றிலும் கட்டுப்பாடு வ்யவஸ்தை இருக்கவேண்டும். மனம் போனபடி நடக்காமல் ஆசையைப் பலவழிகளில் குறைத்துக் கொள்ள வேண்டும். ஆசையே இல்லாத நிலைமை வருவதற்காக இப்படி இருக்க வேண்டும் அதுவே நமது லக்ஷ்யம்.

எவ்வளவு பெரிய சீர்திருக்தக்காரராக இருந்தாலும் சத்துருக்கள் வந்தால் அவர்களிடத்தில் கோபம் வருகிறது. தங்களை அனுசரிக்கிறவர்களிடம் மட்டும் பிரியம் இருக்கிறது. தங்களைவிட பலசாலிகள் வந்தால் பயப்படுகிறார்கள். ஒரு தேள், பாம்பு முதலியவற்றைக் கண்டால் பயப்படுகிறார்கள். எல்லாம் நாம் என்று தோன்றினால் மற்ற வஸ்துக்களைக் கண்டு பயப்படுதல், கோபித்தல் முதலியன இரா. நம்மைக் கண்டு நாமே கோபித்துக் கொள்கிறோமோ? பயப்படுகிறோமோ? இல்லையல்லவா. அந்த நிலை வருவதற்குத்தான் நம்மை நாம் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

# ஞானத்தை யாரிடம் கற்பது

''குரங்கு சாவதற்கு ஒரே ஒரு புண் போதும்

முட்டாள் சாவதற்கு ஒரே ஒரு பிரச்சினை போதும்'' என்று கிராமத்தில் ஒரு உவமான வாக்கியம் உண்டு.

காடுகளில் வாழும் குரங்குகள் பெரும்பாலும் நோய் வாய்ப்படுவதில்லை.

ஆனால் அவைகளுக்கு ஒரே ஒரு புண் வந்துவிட்டால் போதும். அதை நோண்டி நோண்டிப் பெரிதாக்கித் தன்னை அழித்துக் கொள்ளும்.

அதுபோலத்தான் மனித வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை மனதிற்குள் போட்டு நோண்டி நோண்டிப் அதைப் பெரிதாக்கிக் கொள்வதும்.

அந்தக் குரங்கு கொஞ்சம் பொறுமையாய் புண்ணை நோண்டாமல் இருந்தாலே போதும், புண் விரைவில் ஆறிவிடும்.

இதை குரங்குக்குச் சொன்னாலும் புரியாது. அது புண்ணை நோண்டுவதை நிறுத்தப்போவதில்லை.

ஆனால்,

மனிதன் புரிந்து கொள்ள முடியும் தானே?

மனித வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை மனதிற்குள் போட்டு நோண்டி நோண்டிப் அதைப் பெரிதாக்கிக் கொள்ளாமல் வாழமுடியும் தானே?

மனித மனம் வெறும் ''மனம்'' மட்டுமே மனித மனம் குரங்கு அல்ல

என்ற புரிந்து கொள்ளுதல் தான் ''ஞான உதயம்''.

இந்த புரிதல் எப்போதும் இயற்கையில் எதிர்பாராத தருணங்களில் நடந்து கொண்டே தான் இருக்கிறது.

இதில் புரிந்து கொள்வது எல்லாமே சீடர்கள். புரிய வைப்பவை எல்லாமே குரு. இந்த மொத்த நிகழ்வும் ''ஆன்மிகம்'' எனப்படுகிறது, அவ்வளவுதான்.

தத்தாத்ரேயர் எனும் அவதூதர் காட்டில் சுற்றிக் கொண்டிருந்த போது, ஒரு நாட்டின் மன்னனைச் சந்தித்தார்.

தத்தாத்ரேயர் மிக மகிழ்ச்சியாக இருந்ததைக் கண்ட அரசன், அவரது மகிழ்ச்சிக்கான காரணத்தையும், அவரது குரு யார்? என்பதையும் கேட்டான்.

’எனக்கு 24 குருமார்கள் இருக்கின்றனர்...’ என்றார் தத்தாத்ரேயர்.

இந்தப் பதிலைக் கேட்டு ஆச்சரியப்பட்ட அரசன், ‘சுவாமி! ஒருவருக்கு ஒரு குரு தானே இருக்க முடியும்? தங்கள் பதில் வித்தியாசமாக உள்ளதே...’ என்றான்.

அவனிடம், ‘பஞ்சபூதங்களான ஆகாயம், நீர், நிலம், நெருப்பு, காற்று,

‘‘சந்திரன், புறா, மலைப்பாம்பு, கடல், விட்டில்பூச்சி, வண்டு,

‘‘தேனீ, குளவி, சிலந்தி, யானை, மான், மீன், பருந்து, பாம்பு

ஆகியவையும்,

‘‘நாட்டியக்காரி பிங்களா, ஒரு குழந்தை, ஒரு பணிப்பெண், அம்பு தயாரிப்பவன்,

சூரியன் ஆகியோரும் என் குருக்கள் ஆவர்...‘‘ என்றார் தத்தாத்ரேயர்.

மன்னன் ஏதும் புரியாமல் நின்றதைக் கண்ட தத்தாத்ரேயர் இதற்கு விளக்கமளித்தார்...

‘மன்னா! பொறுமையை பூமியிடம் கற்றேன்;

‘‘தூய்மையை தண்ணீரிடம் தெரிந்து கொண்டேன்.

‘‘பலருடன் பழகினாலும், பட்டும், படாமல் இருக்க வேண்டும் என்பதைக் காற்றிடம் படித்தேன்.

‘‘எதிலும் பிரகாசிக்க வேண்டும் என்பதை தீ (நெருப்பு) உணர்த்தியது.

‘‘பரந்து விரிந்த எல்லையற்ற மனம் வேண்டும் என்பதை ஆகாயம் - தெரிவித்தது.

‘ஒரே சூரியன் இருந்தாலும் பல குளங்களில் உள்ள தண்ணீரில் பிரதிபலிப்பது போல மெய்ப்பொருள் ஒன்றாக இருந்தாலும் மனம் பலவாறாக சிந்திப்பதை உணர்ந்தேன்.

‘வேடன் ஒருவன் புறாக்குஞ்சுகளைப் பிடித்தான். அவற்றின் மீது அன்பு கொண்ட தாய்ப்புறா தானும் வலியச் சென்று வலையில் சிக்கியது.

இதில் இருந்து பாசமே துன்பத்திற்கு காரணம் என்பதை உணர்ந்தேன்.

‘எங்கும் அலையாமல் தன்னைத் தேடி வரும் உணவைப் பிடித்துக் கொள்வது போல, கிடைப்பதை உண்டு பிழைக்க வேண்டும் என்பதை மலைப்பாம்பிடம் கற்றேன்.

''பல்லாயிரம் நதிகளை ஏற்றுக்கொள்ளும் கடல் போல, எவ்வளவு துன்பம் வந்தாலும் ஏற்கும் பக்குவத்தை கடலிடம் படித்தேன்.

''பார்வையை சிதற விடாமல் ஒரே இடத்தில் மனதை செலுத்துவதை விட்டில் பூச்சி கற்றுத் தந்தது.

'எல்லாவற்றையும் மறந்து மகிழ்ச்சியாயிருப்பதை தாயிடம் பால் குடிக்கும் குழந்தையிடம் கற்றேன்.

''பணிப்பெண் ஒருத்தி அரிசி புடைக்கும்போது வளையல்கள் உரசி ஒலி எழுப்பின; இரண்டு வளையல்களில் ஒன்றை அவள் கழற்றியதும், ஒலி அடங்கியது.

''இதில் இருந்து இரண்டு பேர் இருந்தாலும் தேவையற்ற விவாதம் ஏற்படும் என்பதைப் புரிந்து கொண்டு, தனிமையே சிறந்ததென்ற முடிவுக்கு வந்தேன்.

'புற்களால் குழிக்குள் மாட்டிக்கொண்ட பெண் யானையைப் பார்த்த ஆண் யானை, அதன் மேல் ஆசை கொண்டு அதுவும் வீழ்ந்தது. இதில் இருந்து, பெண்ணாசையும் துன்பத்துக்கு காரணம் என்பதை உணர்ந்தேன்... '

என்று ஒவ்வொரு பொருளுக்கும் விளக்கமளித்தார்.

இதைக் கேட்ட அரசன், பூரண அமைதி அடைந்தான்.

தத்தாத்ரேயர் இயற்கையிடம் கற்ற இந்த உயர்ந்த பாடம் நம் எல்லாருக்குமே பொருந்தும் தானே..

தத்தாத்ரேயரின் ''அவதூதகீதை'' பல மஹான்களால் சீடர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட அத்வைத கிரந்தமாகும்.

நல்ல சீடனுக்கு எல்லாமே குருதான்.

# அருணகிரி நாதரின் திருப்புகழ்

திருபந்த்ணை நல்லூர்

இருவினையஞ்ச வருவினை கெஞ்ச
இருள்பிணி துஞ்ச மலமாய
எனதிடர் மங்க உனதருள் பொங்க
இசைகொடு துங்க புகழ்கூறி
திருமுகசந்த்ர முருகுகடம்ப
சிவசுத கந்த குகவேல
சிவசிவ என்று தெளிவுறு நெஞ்சு
திகழ நடன்செய் கழல்தாராய்
மருதொடு கஞ்சன் உயிர்பலிகொண்டு
மகிழரி விண்டு மருகோனே
வதைபுரிகின்ற நிச்சரர்குன்ற
வலம்வருசெம்பொன் மயில்வீரா
அருகுறுமங்கையொடுவிடையுந்தும்
அமலுனுகந்த மருகோனே
அருள்செறிபந்தணையிலிருமங்கை
அமளி நலங்கொள் பெருமாளே

*பொருள் : மருதமரமாக நின்ற யக்ஷர்களை ஆட்கொண்டு கம்சனை மாய்த்து விளங்கிய திருமாலின் மருகோனே கொடுமௌசெய்யும் அசுர்ர்களை மாய்க்க மயிலின்மேல் வருபவரே, இடப்பக்கத்தில் உமையுடன் விளங்கும் சிவனுக்கு உகந்த பெருமானே அருள் நிறைந்த பந்தணைநல்லூரில் வள்ளி நாயகியும் தெய்வானையுடன் விளங்கும் பெருமானே சஞ்ஜிதம் ப்ராரப்தம் எனும் இருவினைகள் அஞ்சி ஓடுமாறும், இப்பிறவியின் வாயிலாக ஏற்படும் ஆகாமிவினை பற்றாது வெளியேறவும் மாயை எனும் பிணி மாயவும் மலமாகிய என் துன்பங்கள் அழியவும் தேவரீருடைய புகழ் பெருகி வளரும் வகையில் இசைகொண்டு புகழ்பாடல்களைக் கூறி போற்றவும் அருள் புரிக.திருமுகம் உடைய அழகர் எனவும் குளிர்ந்த ஒளி திகழும் முருகன் எனவும், கடம்ப மாலை அணிந்தவர் எனவும் கந்தன் குகன் வேலன் எனவும் சிவ சிவ எனவும் நெஞ்சில் தெளிவு மேவத் திரு நடனம் கொள்ளும் திருத்தாள்மலரைத் தருவீராக.*

# குலசேகர ஆழ்வாரின் அறிவுரை

*கொல்லி நகரத்தில் வஞ்சிக்களத்தில் இருந்து அரசாண்ட திருடவிருதன் என்பவரின் கேள்இவர், இராமபிரானிடம் மிகவும் ஈடுபாடு கொண்டவர். இவர் 120 ஆண்டுகள் வாழ்ந்திருந்தார் என ஆரியப்படுகிறது.*

*இறைவனை விட்டால் வேறு போக்கிடம் இல்லை என்றே இருக்க வேண்டும் என்பதே இவரின் அறிவுரை. இதற்கு அவன் பல மேற் கோள்கள் காட்டுகின்றார் எளிதில் புரிந்து செயல்பட.*

**அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்று அவள் தன்**

**அருள் நினைத்தே அழும் குழவி அதுவே போன்று இருந்தேனே.**

*பெருமாள் திருமொழி 5-1*

*பெற்றதாய் சினத்தினால் குழந்தையை வெறுத்துத் தள்ளினாலும் அத்தாயின் அன்பிற்காக ஏங்கி அவளையே நினைத்து அழும் குழந்தை போன்று இறைவா நீ என்னை ஒதுக்கினாலும் உன்னை விட்டால் எனக்கு போக்கிடம் இல்லை என்று உன்னையே தான் அண்டி நிற்பேன் என்கிறார்.*

**கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்**
**கொண்டானை அல்லால் அறியாக் குல மகள் போல்** 5-2

*அடுத்தவர் இகழ்ந்திட தன்னை கணவன் இகழ்ந்திடினும் கணவனையே நினைத்து வேறொருவரையும் நினையாத குலமகளாம் மனைவி போல் இருப்பேன் என்கிறார். இந்த மேற்கோள் சரி. தற்காலத்திற்கு ஏற்குமோ என்பதை வாசகர்கள் தான் முடிவெடுக்க வேண்டும்.*

**தான் நோக்காது எத்துயரம் செய்திடினும் தார் வேந்தன்.**

**கோல் நோக்கி வாழும் குடி போன்று இருந்தேனே** 5-3

*அரசன் குடி மக்களைக் கவனித்துக் காப்பாற்றாமல் இருந்தாலும் துயரமும் அளிப்பவனாக இருந்தாலும் அரசனையே நம்பி வாழும் குடி.மக்கள்போல் இருந்தேனே என்கிறார்.*

**வாளால் அறுத்துச் சுடிலும் மருத்துவள் பால் மாளாத**
**காதல் நோயாளன் போல்.** 5-4

*தன் உடல் நோய்க்கு வலிக்கும் அளவிற்கு அறுவை செய்யும் மருத்துவனை விட்டு நோயாளி மீண்டும் அவனையே நம்பி அவனையே அணுகுவது போலே இருந்தேனே! தன் நலத்திற்காகத் தான் உடல்வலி தாங்க முடியாத அளவிற்கு அறுவைசிகிச்சை செய்கிறான் மருத்துவன். என்று நோயாளி நம்புவது போல தனக்கு ஏற்படும் துன்பமும் நமது. நலத்திற்காகவே இறைவன் அளிக்கின்றார் என்ற எண்ணத்தில் அவனை விடாமல் பற்றிக் கொள்ள வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது இங்கு.*

**எங்கும் போய் கரை காணாது எறி கடல்வாய் மீண்டேயும்**
**வங்கத்தின் கூம்பு ஏறும் மாப் பறவை போன்றேனே!** 5-5.

*பாய்மரக்கப்பல் ஒன்று நடுக்கடலில் இருக்கிறது. அதன் கொடிமரத்தில் அமர்ந்துள்ள பறவை ஒன்று அதனிருந்தும் பறந்து சென்று பல திக்கும் திரிந்து எங்கும் தங்கும் இடம் கிடைக்காமல் மீண்டும் கப்பல் பாய்மரத்தின் மீது வந்து அமருமாப்போலே ' நான் உன்னையே வந்து தான் அடைவேன் என்கின்றார்.*

**செந்தழலே வந்து அழலைச் செய்திடினும் செங்கமலம்**
**அந்தரம் சேர் செங்கதிரோற்கு அல்லால் அலராவால்.** 5-6

*கொழுந்து விட்டு மிகுந்த வெப்பம் கொடுக்கும் நெருப்பு அருகில் இருந்தாலும் தாமரை மலர் சூரியனின் ஒளிருக்கே மலருவது போன்று நான் என் துயரை நீ தீர்க்காவிடிலும் நான் மற்றொன்றைப் பற்றமாட்டேன் என்று உறுதிபடக் கூறுகிறார். இந்த உறுதி மனிதருக்கு வேண்டும் என்பது கவனத்தில் கொள்ளவேண்டிய அறிவுரை.*

**எத்தனையும் வான் மறந்த காலத்தும் பைங் கூழ்கள்.**
**மைத்து எழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்** 5-7

*வானத்திலிருந்து மழை பெய்யாமல் பொய்திடினும் பசும் பயிர்கள் கருமேகங்களையே எதிர் பார்த்திருப்பது போன்று என் துயரத்தை நீ போக்காவிட்டாலும் என் மனத்தில் உன் அருளையே நினைத்திருப்பேன் என்கிறார் வானம் பார்த்த பூமி (பயிர்) என்பார்கள் விவசாயிகள்.*

**தொக்கு இலங்கு யாறெல்லாம் பறந்துஓடித் தொடுகடலே**
**புக்கு இன்றிப் புறம் நிற்க மாட்டாதே மற்று அவைபோல்** 5-8

ஆறுகள் எல்லாம் முடிவில் சென்று அடைவது கடலையே அன்றி அவை வேறு இடத்தில் சென்று சங்கமமாகாது. அது போன்று நான் உன்னிடம் அன்றி வேறு எதிலும் சேர மாட்டேன்.

**நின்னையே தான் வேண்டி நீள் செல்வம் வேண்டா தான். 5-9**

தன்னையே தான் வேண்டும் செல்வம் போல் பணக்காரன் ஒருவன் இருப்பது போதுமே! மேலும் வேண்டாமே! என்று செல்வத்தை வெறுத்தாலும் அவனையே சென்று சேரும் செல்வம் போல் உன் மாயையால் நீ என்னை ஏற்காவிடிலும் உன் அருளுக்காக நான் உன்னையே தான் அடைய விரும்புவேன் என்கிறார் ஆழ்வார். என்னே உறுதி.

இந்த ஆழ்வாரின் அறிவுரை இறைவன் ஒருவனையே பற்ற வேண்டும் என்பதில் உறுதியாக இருக்க வேண்டும் என்பது ஒன்று தான். இருப்பினும் அதனை நன்கு புரியும் படி. பல்வேறு உவமைகளைக் காட்டி, எவருக்கும் எளிதில் மனதில் பதியும் படி. கூறியுள்ளதற்கு மக்கள் இந்த ஆழ்வார்க்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறார்கள் எனில் அது மிகையாகாது.

□ □ □ □